# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2031 மார்கழி 11 செவ்வாய்க்கிழமை (26-12-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:30


## வீடு பார்க்கச் சென்றவேளை பயங்கரம்!

# மிருசுவிலில் காணாமற்போன எண்மரும் ஒரே புதைகுழியில் சடலங்களாக மீட்பு!

## கழுத்து வெட்டப்பட்ட நிலையில் சடலங்கள்!

நெல்லியடி,டிசெ.26

மிருசுவில் வடக்கு படித்த மகளிர் குடியேற்றத் திட்டப் பகுதியில் நேற்று மாலை புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட சடலங்கள் உருக்குலைந்து துர்நாற்றம் வீசிய நிலையில் காணப்பட்டன.

சடலங்களில் பெரும்பாலான வற்றின் கழுத்தில் வெட்டுக்காயங்கள் காணப்பட்டன. சில சடலங்களின் கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டிருந்தன. கைகளிலும் வெட்டுக் காயங்கள் காணப்பட்டன.

கழுத்தில் காயங்கள் காணப்பட்ட பகுதிகளைச் சுற்றி 'பெனியன்' போன்ற உள்ளாடைகள் சுற்றப்பட்டிருந்தன.

மீட்கப்பட்ட சடலங்களில் ஒன்று ஐந்து வயதுச் சிறுவனுடையது. அச்சடலத்தின் கால் ஒன்று முறிந்த நிலையில் தொங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சடலங்களுடன் சில தடயப் பொருள்களும் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-109-173)

## கொலையுண்டோரின் விவரம்

நெல்லியடி,டிசெ.26

மிருசுவில் வடக்கில் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எட்டுப்பேரினதும் பெயர் விவரங்கள் வெளியாகியுள்ளன. அவை வருமாறு:-

★ எஸ்.வில்வராஜா (வயது-40)

★ அவரது மகனான வில்வராஜா பிரதீபன் (வயது-15)

★ மற்றொரு மகனான வில்வராஜா பிரசாந்த் (வயது -5). இவரது வலது கால் முறிந்த நிலையில் காணப்பட்டது.

★ தேவகுலசிங்கம் (வயது-21)

★ ஞானபாஸ்கரன் பாஸ்கரன் (வயது-19). இந்திய இராணுவம் நிலைகொண்டிருந்த சமயம் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகிய இவர் இடது கையை முழங்கையுடன் இழந்திருந்தார்.

★ நடேசு ஜெயச்சந்திரன் (வயது - 21)

★ கதிரன் ஞானச்சந்திரன் (வயது -35)

★ அவரது மகனான ஞானச்சந்திரன் சாந்தன்(வயது-15). (ஐ-3-109)

## சடலங்களைப் பார்த்து கதறி அழுத உறவினர்கள்

### மந்திகையில் மனதை உருக்கிய காட்சி

யாழ்ப்பாணம்,டிசெ.26

புதைகுழியில் இருந்து மீட்கப்பட்டு மந்திகை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட சடலங்களை அடையாளங்காட்ட உறவினர்கள் நேற்றிரவு அங்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஈ.பி.டி.பியின் பருத்தித்துறை அலுவலகத்தில் கூடியிருந்த உறவினர்களை அந்த அமைப்பினர் நேற்றிரவு 7.30 மணியளவில் மந்திகை ஆஸ்பத்திரிக்குச் கூட்டிச் சென்றனர். அங்கு சடலங்களைக் கண்டதும் உறவினர்கள் தலையில் அடித்துக் கொண்டு 'ஐயோ! ஐயோ!' என்று பலவாறாக ஓவெனக் கதறி அழுத காட்சி மனதை உருக்குவதாக இருந்தது.

இன்று இடம்பெறவுள்ள மரண விசாரணையின்போது உறவினர்கள் சாட்சியமளிக்க உள்ளனர்.

(ஐ-3)

## இறுதிச் சடங்குச் செலவை அமைச்சு பொறுப்பேற்கும்!

யாழ்ப்பாணம்,டிசெ.26

மிருசுவில் வடக்கில் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட ஒன்பது பேரினதும் மரணச் சடங்குகளுக்கான செலவுகளை வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சு பொறுப்பேற்கவுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பின் பேரில் ஈ.பி.டி.பியின் யாழ்.தலைமையகம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.

இந்தப் படுகொலைச் சம்பவத்தில் போது உயிர்தப்பிவந்த நபரான பொன்னுத்துரை மகேஸ்வரன் மூலம் பெற்ற தகவல்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி.கே.குகேந்திரனும் இராணுவத் தளபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

அதனையடுத்து இராணுவத் தளபதி விடுத்த விசேட பணிப்பின்பேரில் யாழ்.மாவட்ட கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா

(12ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் நேற்று தோண்டி எடுக்கப்பட்டன!!

(வடமராட்சி, நெல்லியடி செய்தியாளர்கள்)

வடமராட்சி,டிசெம்பர்26

**மிருசுவில் வடக்குப் பகுதியில் உள்ள தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற வேளையில் காணாமற்போயிருந்த பொதுமக்கள் எண்மரும் நேற்று அப்பகுதியில் புதைகுழி ஒன்றிலிருந்து உருக்குலைந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டனர்.**

**சாவகச்சேரி மாவட்ட நீதிவான் அ.பிரேமசங்கர் முன்னிலையில் தோண்டி எடுக்கப்பட்ட சடலங்கள் நேற்றிரவு ஏழு மணியளவில் மந்திகை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.**

மிருசுவில் வடக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து கரவெட்டி, நாவலர்மடம் பகுதியில் வசித்து வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட எட்டுப்பேருக்கே இந்தப் பயங்கரமானதும், பரிதாபகரமானதுமான முடிவு ஏற்பட்டிருக்கிறது.

5வயதுச் சிறுவன் உட்பட இவர்கள் அனைவரும் ஆண்கள் ஆவர்.

இவர்கள் இம்மாதம் 19 ஆம் திகதி மிருசுவில் வடக்கில் உள்ள தங்கள் வீடுகள், காணிகளைப் பார்வையிடச் சென்ற பின்னர் காணாமற் போயிருந்தனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மிருசுவில் படுகொலைகள் தொடர்பாக அதிகாரி உட்பட 9 படையினர் கைது!

### இராணுவத் தளபதியின் விசேட பணிப்பில் விசாரணை

கொழும்பு,டிசெ.26

மிருசுவில் வடக்கில் காணாமற்போன எட்டுப் பொதுமக்கள் சடலங்களாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இராணுவத் தளபதியின் விசேட உத்தரவுக்கேற்ப விசாரணைகளை மேற்கொண்டு வரும் இராணுவப் பொலீஸார் ஓர் அதிகாரியையும் எட்டுச் சிப்பாய்களையும் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்றிரவு எட்டு மணிக்கு விடுத்த பிந்திய செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பிந்திய அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கைது செய்யப்பட்டுள்ள படையினர் இராணுவப் பாதுகாப்பில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். நீதிமன்றம் கோரும்போது அவர்கள் ஆஜர் செய்யப்படுவர்.

இந்த விடயத்தை இராணுவத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு அரசிடம் கோருகின்றனர் புலிகள்!

### வன்னித் தலைமையகம் நேற்று அறிக்கை

வவுனியா,டிசெ.26

சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கான நல்லெண்ண வெளிப்பாடாக தங்களால் அறிவிக்கப்பட்ட ஒருதலைப்பட்சமான போர்நிறுத்த நடவடிக்கையை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளபோதிலும், அறிவித்ததன்படி, தமது போர்நிறுத்த நடவடிக்கையைத் தொடர்ந்து முன்னெடுக்கப் போவதாகவும் அரசாங்கம் தனது நிலைப்பாட்டை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் விடுதலைப்புலிகள் நேற்றுத் திங்கட்கிழமை வன்னித் தலைமையகத்திலிருந்து வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர்.

அரசு போர் நிறுத்தத்தை நிராகரித்த போதும் விடுதலைப் புலிகள் அறிவித்தபடி, ஒருமாத காலத்திற்கு ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தத்

(12ஆம் பக்கம் பார்க்க)

### 30 சடலங்களும் புலிகளிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.26

தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்ற மோதல்களில் உயிரிழந்ததாகத் தெரிவித்து படையினரால் கடந்த வெள்ளி, சனி ஆகிய தினங்களில் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டிருந்த 30 சடலங்களும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளால் நேற்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## போர்முனைகளில் நேற்று அமைதி!

யாழ்ப்பாணம்,டிசெ.26

நத்தார் பண்டிகைத் தினமான நேற்று குடாநாட்டின் யுத்தமுனைகளில் அமைதி நிலவியது.

நத்தார் பண்டிகையை ஒட்டி படையினர் நேற்று தாக்குதல் நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்தி இருந்ததாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரட்ண தெரிவித்தார்.

போர் முனைப் பகுதிகளில் இடையிடையே ஷெல் சத்தங்கள் கேட்ட போதும் பெரும்பாலும் அமைதி நிலவியது.

ஊரடங்கு தளர்த்தப்பட்டிருந்ததால் யாழ்.நகரப்பகுதியிலும் ஏனைய இடங்களிலும் தேவாலயங்களில் இடம்பெற்ற நள்ளிரவுப் பிரார்த்தனைகளில் மக்கள் கலந்துகொண்டனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## விடைத்தாள் மதிப்பீட்டாளருக்கு!

ஜி.சீ.ஈ (சாதாரண தரப்) பரீட்சை விடைத்தாள் மதிப்பிடும் பணிக்காக கொழும்பு செல்லும் பிரதம பரீட்சகர்களை இன்று காலை 7 மணிக்கு யாழ். சிவில் நிர்வாக அலுவலக பயணச்சீட்டுப் பிரிவில் சமுகம் தந்து பயணச்சீட்டைக் கொள்வனவுசெய்து உடன் பயணத்தை மேற்கொள்ளும் படி யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஐ-3)


**BITSMANS**
கல்வி நிறுவனம்
மானிப்பாய்.

**A/L 2003**
★ கலை ★ வர்த்தகம்
★ கணிதம் ★ உயிரியல்
(எமது வழமையான SUPER GRADE ஆசிரிய குழுவினால் ஆரம்பமாகிறது)
ஆரம்பம்:- 27.12.2000
புதன் 3.30 மாலை. (82110)

**BITSMANS**
கல்வி நிறுவனம்
மானிப்பாய்.
**SPOKEN ENGLISH WITH GRAMMAR**
By.M.A.HARY
ஆரம்பம்:-28.12.2000 வியாழன் 10.00 a.m. (82111)

**I.B.S**
சுண்டிக்குளி
**A/L 2003**
பிரத்தியேக வகுப்புக்கள்
27-12-2K புதன் 5 p.m.
MAT : B.ரவீந்திரன் (B.Sc.)
BIO : T.ஜெயசீலன்(B.Sc.)
PHY : N.மோகன்(B.Sc.)
CHE : J.மனோ.
LOG : S.கலைச்செல்வன்.
ACC : S.D.J.சுதர்ஷன். (82106)

**சயன்ஸ் அக்கடமி**
நெல்லியடி.
**A/L 2003**
உயிரியல், கணிதம்,
கலை, வர்த்தகம்
CH- திரு.மணியம்.
PH- திரு.குமரன்.
MA- திரு.செந்தில்ராஜ்.
BIO- திரு.கெங்காதரன்.
திரு.தற்பரன்.
ஆரம்பம்:- 28-12-2K. (82103)

**ஸ்ரீ செல்வா சினிமா**
ஸ்ரான்லி வீதி
தினசரி 10.30, 2.30 (ப.நே)
முரளி நடித்த
**மனுநீதி**
புதிய வெளியீடு
(CD பிரதி) (82121)

**லஷ்சுமி சினிமா**
இணுவில்
விஜய், சிம்ரன் நடித்த
**துள்ளாத மனமும் துள்ளும்**
(ரீலஸ்) காட்சிகள் 10.30, 2.30 (ப.நே.) (82128)

**நாகம்ஸ் சுன்னாகம்**
இன்று மட்டும்
விஜய், ஜோதிகா நடிக்க
S.J.சூர்யாவின்
**குஷி**
தினசரி – 11.00, 2.30 (பி.நே.)
அடுத்த வெளியீடு
நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த
**TITANIC**
(தமிழ்) (81995)

**ராஜா யாழ்ப்பாணம்**
விஜய், மோனிக்கா, ரம்பா, மணிவண்ணன்
மற்றும் பலரின்
வித்தியாசமான நடிப்பில்
**மின்சாரக்கண்ணா**
காட்சிகள்: 10.30, 2.00 (பு.நே.) (C/14247)


# கண்ணீர் அஞ்சலி

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளராகிய

**க.ரதிதரன்** அவர்களின் அன்புத் தந்தையார்

## தம்பையா கதிரேசு

அவர்கள் 24.12.2000 அன்று காலமாகியதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்.பல்கலைக்கழக**
**2ஆம் வருட நாடகமும் அரங்கியல்துறை மாணவர்கள்.**

(82127)

We Serve

வயாவிளான் தெற்கு திடற்புலத்தில்.......
**திடற்புலம் சனசமூக நிலைய ஆதரவில்**
உரும்பிராய் லயன்ஸ் கழகம் நடத்தும்

## இலவச மருத்துவ முகாமும் கருத்தரங்கும்

இடம் : திடற்புலம் சனசமூக நிலையம்,
வயாவிளான் தெற்கு.

காலம் : 28.12.2000 வியாழக்கிழமை காலை
9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை

கருத்தரங்கு : போதைவஸ்து
லயன் டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம்

மேற்படி முகாமில்.....
- நெஞ்சு நோய்களுக்கான பரிசோதனை
- இரத்த அழுத்தப் பரிசோதனை
- நீரிழிவுப் பரிசோதனை

என்பன இலவசமாக மேற்கொள்ளப்படும்.
வைத்திய நிபுணர்களும், மருத்துவ மாணவர்களும் இந்தப் பரிசோதனையை நடத்துவர்.

அனைவரும் வருக! பயன் பெறுக!!

லயன் வ.ஆறுமுகம் (தலைவர்)
லயன் அ.க.த.கிருஷ்ணராசா (செயலாளர்) (82119)

# S.L.E.A.S வகுப்பு III போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

**இடம்: யா/வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரி**
**காலம்: 27.12.2000 - 31.12.2000**
**நேரம் : மு.ப. 9.30 மணி முதல் பி.ப.3.00 மணி வரை**

மேற்படி கருத்தரங்கில் கீழ் காணும் துறை சார்ந்த நிபுணர்கள் கருத்துரை வழங்குவார்கள் அதற்கான கைபேடுகளும் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ் | – | உயர் பட்டப்படிப்பு பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம். |
| கலாநிதி சபா.ஜெயராஜா | – | சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வியியல்துறை, யாழ். பல்கலைக்கழகம். |
| கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை | – | மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர். |
| கலாநிதி க.குணராசா | – | பிரதேச செயலர், நல்லூர். |
| திரு.ப.விக்னேஸ்வரன் | – | கல்விப் பணிப்பாளர், தீவகவலயம். |
| திரு. க.கனகரத்தினம் | – | S.L.A.S. பிரதேச செயலர், முசலி. |
| திரு.அ.பஞ்சலிங்கம் | – | S.L.E.A.S. இளைப்பாறிய அதிபர், யாழ்.இந்துக் கல்லூரி. |
| திரு. நா.வரதராசன் | – | S.L.E.A.S. பிரதிக்கல்விப் பணிப்பாளர், யாழ்.வலயம். |
| திரு.நா.சத்தியநாதன் | – | கோட்டக் கல்வி அலுவலர், சாவகச்சேரி. |
| திருமதி கோகிலா மகேந்திரராசா | – | உதவிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம். |
| திரு.கு.சண்முகநாதன் | – | M.A.(Edu.) அதிபர், மானிப்பாய் இந்துக் கல்லூரி. |
| திரு.தா.அமிர்தலிங்கம் | – | M.A. (Edu.) நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி. |

**இலங்கை ஆசிரியர் சங்க யாழ்.மாவட்டக் கிளை**

சா.தியாகலிங்கம் தலைவர்.
(82124)
மு.இராசநாயகம் செயலாளர்.

# கண்ணீர் அஞ்சலி

ஓவிய மாமணி

## இரத்தினம் கனகராஜா

(திருநெல்வேலி)

திருநெல்வேலி கலைவாணி கலையக ஸ்தபதி விஸ்வப்பிரம்மஸ்ரீ இரத்தினம் கனகராஜா திருகோணமலையில் சிவபதம் அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இ.ஜெயராஜ் (சகோதரன்)
மயூரப்பிரகாஷ் தொலைத் தொடர்பகம்
மாதனை, பருத்தித்துறை.

# மரண அறிவித்தல்கள்

## வினாசித்தம்பி சிவலோகநாதன்

(உசன்) (நில அளவை பட வரைஞர்)

உசன், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வினாசித்தம்பி சிவலோகநாதன் நேற்று (25-12-2000) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் புஸ்பராணியின் அன்புக் கணவரும், ஹரன், ஜெகன், முரளி ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரசாந்தினி, ராதிகா, கஜெந்தினி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், நடராசா மற்றும் கமலாதேவி இராசேந்திரன் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான குகதாசன், பாக்கியலட்சுமி மற்றும் தம்பிப்பிள்ளை, சிவகாமசுந்தரி, காலஞ்சென்ற தவமணிதேவி மற்றும் லீலாவதி, திலகவதி, சோதிநாயகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.கமலாதேவி (சகோதரி)
வி.இராசேந்திரன் (சகோதரர்)
186,பலாலி வீதி, கந்தர்மடம். (82117)

## திருமதி இராசரட்ணம் செல்வராசாத்தி

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் மல்லாகம் மற்றும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசரட்ணம் செல்வராசாத்தி நேற்று (25-12-2000) திங்கட்கிழமை நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் கே.இராசரட்ணத்தின் அன்பு மனைவியும், ரவிக்குமார் (பிரான்ஸ்), சந்திரகுமார்(பிரான்ஸ்), செல்வரஞ்சினி(லண்டன்), செல்வரஜனி (கனடா), செல்வராஜி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நீர்கொழும்பில் நடைபெறும்.

தொடர்பு விலாசம்:
திரு.கே.இராசரட்ணம்
C/O K.அருளின்பநாதன்
நியூ கல்பனாஸ்,
No 2.கிராண்ட் ஸ்ரீட்,
நீர்கொழும்பு. (82115)

தகவல்:
விஜயகுமார் குடும்பம்,
பாலசிங்கம் இராசமணி (மைத்துனி)
சோடாக்கம்பனி ஒழுங்கை,
மல்லாகம்.

## குழந்தை இராசதுரை

(முன்னாள் பிரபல பழ வர்த்தகர், பெரியகடை)

இல.18, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட குழந்தை இராசதுரை அவர்கள் 25.12.2000 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற றோசலினின் அன்புக் கணவரும், திருமதி இராஜபிறேமா மரியநாயகம் (யாழ்.வேம்படி மகளிர்கல்லூரி), திரு.கி.ஆனந்தராஜன் கியூபேட்(கிராம உத்தியோகத்தர், நாவாந்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு.செ.யோ.மரியநாயகம் (நூலகம் யாழ்.பல்கலைக்கழகம்) திருமதி ஜெயசுதா ஆனந்தராஜன் ஆகியோரின் மாமனாரும், லூட்ஸ் பூரணி,யதுர்சன்,யதுர்சினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நேற்று (25.12.2000) திங்கட்கிழமை பி.ப.3.30 மணியளவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
இ.கி.ஆனந்தராஜன்.
இல18, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (82126)

## கார்த்திகேசு ஆறுமுகம்

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் இராசசிங்கம் வீதி, 32ஆம் இலக்கத்தில் வசித்தவரும், அல்வாய் வடக்கு, அரசடி விநாயகர் ஆலய மூத்த உறுப்பினருமான கார்த்திகேசு ஆறுமுகம் அவர்கள் நேற்று 25.12.2000 இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னபூரணத்தின் அன்புக் கணவரும், திருமதி க.கண்ணகையின் அன்புச் சகோதரனும், திருமதி நாகமணி பவளத்தின் மைத்துனரும், செல்வமாணிக்கம், கார்த்திகேசன், சண்முகவடிவு (தவம்), பாலசுப்பிரமணியம், சௌந்தரலிங்கம் (விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்) சிவசுப்பிரமணியம் (இத்தாலி) சிவலோகநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தகோகிலம், மாக்கிரட் பக்சவா, காலஞ்சென்ற யோகராசா, றெஜி கிறிஸ்ரில்டா (ஆசிரியை, மட்டக்களப்பு), சந்திரபவானி (இத்தாலி) உதயசாந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், உஷா, ஜஸ்மின், ஜீவன், தயானந்தன், யாழினி, மாலினி, செல்விகா, கஜேந்திரன், பாலேந்திரன், கமலேந்திரன், கில்றூன், பிறண்டா, பாமினி, சுபாங்கன், கௌசிகன் ஆகியோரின் அன்புப் பேரனும், மதுசியா, ஜனுசியா, சாருஜா ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-12-2000) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.
இல32, இராசசிங்கம் வீதி, யாழ்ப்பாணம். (82123)

# உதயன்

## நிவாரண வெட்டு வேண்டாம்!

இடம்பெயர்ந்தவர்கள் என்ற வகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் மக்களில் ஒன்றேகால் லட்சம் குடும்பங்களுக்கு உலர்உணவு நிவாரணம் வழங்கப்பட்டுவருகிறது.

1990 மத்தியில் வலிகாமம் வடக்கு மற்றும் தீவுப்பகுதி மக்களுடன் ஆரம்பித்த இடம்பெயர்வு 2000 ஆம் ஆண்டில் தென்மராட்சி மக்களுடன் வந்து நிற்கிறது. 1995 ஒக்ரோபர் மாதம் நிகழ்ந்த மிகப் பெரும் இடப்பெயர்வையும் உள்ளடக்கினால் இடம்பெயர்ந்து வாழாத மக்கள் குடாநாட்டில் மிகச் சிலரே.

1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மக்களுக்கு உண்டான பாதிப்பு மிகப் பெரிது என்பதால் — மிகப் பெரும் எண்ணிக்கையினர் தங்கள் தொழில்களை இழந்து வருவாய் இல்லாதவர்களாக மாறியதால் — உலர் உணவு நிவாரணம் வழங்க ஆரம்பிக்கப்பட்டது.

மக்கள் இடம்பெயர்வு ஆரம்பித்த பின்னர் பாதிப்பு வருடாந்தம் அதிகரித்தவாறே உள்ளது. இப்போதும் அதே நிலை தான். சிவில் நிர்வாகம் குடாநாட்டில் தடங்கல் இன்றி நடைபெறுவது உண்மை. அதனால் இடம்பெயர்ந்த மக்களின் நாளாந்த வாழ்க்கைக் கஷ்டங்கள் குறைந்து விட்டன என்று எவரும் கருதக்கூடாது.

கடந்த பத்து வருடங்களாக இடம்பெயர்ந்தவர்களுக்கு இன்னும் வேலை வாய்ப்பில்லை. யாழ். மாவட்டத்தின் பிரதான தொழில்களான விவசாயமும், மீன்பிடியும், பல கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் முட்டுக்குள்ளாகி உள்ளன. மக்களின் ஜீவனோபாயத்துக்கு உதவும தொழிற்சுதந்திரத்தை விட "பாதுகாப்புக் காரணம்" என்ற பதத்துக்கே முதலிடமும் முக்கிய இடமும் தரப்படுகிறது.

சிறு கைத்தொழில், சுயதொழில், கைத்தொழில், என்பன மீண்டும் தலைகாட்டத்தானும் இயலவில்லை. மொத்தத்தில் குடாநாட்டின் உற்பத்தித் திறனை அதிகரிக்க வசதி, வாய்ப்பு, உதவி எதனையுமே குறிப்பிடக்கூடிய அளவில் காணோம்.

இந்த நிலையில் குடாநாட்டு மக்களுக்கு வழங்கப்படும் உலர் உணவு நிவாரணத்தை வெட்டுவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அதற்கான நடவடிக்கைகளில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். வடக்கு மக்களின்புனர்வாழ்வுக்குப் பொறுப்பான அமைச்சும் பார்த்துக் கொண்டிருக்கிறது!

பணவீக்கம் உயர்ந்து செல்லும் இந்நாள்களில் 750 ரூபா பெரிய வருமானமா? கொழும்பைவிட பல மடங்கு கூடுதலான யாழ்ப்பாணத்தின் வாழ்க்கைச் செலவுப் புள்ளிக்கு அந்தத்தொகை ஒருவரின் ஒரு வாரச் செலவுக்கேனும் ஈடுகொடுக்குமா?

வேண்டுமானால் பெருந்தொகை வருமானம் பெற்றுக் கொண்டு நிவாரணம் பெறுவோருக்கு அதனை நிறுத்தலாம்.

மக்கள் முழுமையான இயல்பு நிலைக்குரிய வாழ்க்கைக்குத் திரும்பும் வரை நிவாரண வெட்டை நினைத்தும் பார்க்கலாகாது. நிவாரண வெட்டை அமுல் நடத்த அரசு கொடுக்கை வரிந்துள்ளமை கண்டிக்கப்பட வேண்டியதாகும். தனது முடிவை அது உடனடியாக மாற்றவேண்டும்.

நிறுத்துவதாகக்கூறி பின்னர் மக்கள் கோரிக்கைக்கு இணங்கி முடிவை வாபஸ் பெற்று அரசியல் லாபம் தேடினாலும் பரவாயில்லை! மக்களுக்குரிய நிவாரணம் தொடர்ந்து வழங்கப்படவேண்டும்.

## கலந்துரையாடல்

நெல்லியடி, டிசெ. 26

யாழ் பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் உள்ள அரச மருத்துவமனைகளில் பணிபுரிந்துவரும் சுகாதாரத் தொண்டர்களுக்கான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் ஆரியகுளத்தில் உள்ள டி. எட் [illegible] கல்வி நிலையத்தில் நடைபெற உள்ளது.

சுகாதாரத் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக இக் கலந்துரையாடல் இடம்பெற விருப்பதனால், தொண்டர்களை தவறாது சமுகம் தருமாறு, சுகாதாரத் தொண்டர்கள் சங்கத்தின் தலைவர் வி. உதயசூரியன் தெரிவித்துள்ளார். (ம-109)

# வர்த்தகக் கப்பல்களுக்கும் செஞ்சிலுவை வழித்துணை

## விரைவில் பெற்றுக்கொள்ள முயற்சி

யாழ்ப்பாணம், டிசெ. 26

வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையினால் வாடகைக்கு அமர்த்தப்படும் கப்பல்களின் சேவைக்குச் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் வழித்துணையைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் யாழ். வணிகர் கழக உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போது இத்த விவரம் தெரிவிக்கப்பட்டது.

ஈ.பி.டி.பி. அமைப்பின் யாழ். தலைமையகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் பிரஸ்தாப கப்பல்களில் எடுத்து வரப்படும் பொருள்களுக்குக் காப்புறுதி செய்யப்படும் என்றும் வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து தடை செய்யப்பட்ட பொருள்கள் தவிர்ந்த ஏனைய பொருள்களைப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றிச் சுயாதீனமாகக் குடாநாட்டுக்கு எடுத்து வருவதற்கும் —

கொழும்பில் இருந்து பொருள்களை எடுத்துவர வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையினால் கப்பல்களை வாடகைக்கு அமர்த்துவதற்கும்—

நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் அங்கு தெரிவித்தார்.

ஸ்ரான்லி வீதியில் பாதுகாப்புக் காரணங்களுக்காக வீதிமூடப்பட்டிருப்பதால் அந்தப் பகுதியில் உள்ள 110 வியாபார நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் வணிகர் சங்கம் எடுத்துக் கூறியது.

பிரஸ்தாப நிறுவனங்கள் மீண்டும் வழமைபோல் செயற்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதியளித்தார்.

குடாநாட்டில் வர்த்தகச் செயற்பாட்டினை மேலும் விருத்தியடையச் செய்ய வங்கிக் கடன்களை வழங்கவும்—

'அஸ்ரோரியா', 'பிரின்சஸ் காஷ்' கப்பல்களில் பொருள்களை ஏற்றிய வர்த்தகர்களுக்கு நஷ்டஈடு கிடைக்கவும் —

வங்கிகள் மூலம் குடாநாட்டு நகை வர்த்தகர்களுக்கு 'பிஸ்கட்பவுண்' வழங்கவும்—

நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் டக்ளஸ் தெரிவித்தார் [ஐ-3]

# போரை விரும்புவோர் மனநோயாளிகளே!

## நாடக விழாவில் வண.பிதா ஜெயக்குமார்

வலி. தென்மேற்கு, டிசெ. 26

இன்றைய காலகட்டத்தில் போரை விரும்புவர்கள் உண்மையில் மனநோயாளிகளே.

இவ்வாறு மனித முன்னேற்ற நடு நிலைய இயக்குநர் வண. பிதா ஜெயக்குமார் அடிகளார் கூறினார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் விரிவுரையாளர் க. ரதிதரனின் 'பொங்கொலிநகர்' நாடக இறுதிவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய வண. பிதா ஜெயக்குமார் மேலும் பேசியதாவது:-

நாட்டின் சமாதானம் மிளிர வேண்டும், சமாதானத்துக்கான சூழலை அனைத்துத்தரப்பினரும் வரவேற்க வேண்டும்.

எந்தவொரு நாட்டிலும் நடைபெறும் பிரச்சினைகளை பேசியே தீர்க்க முற்படுகிறார்கள்.

யுத்தத்தின் மூலம் அழிவுகளும், சின்னாபின்னங்களுமே ஏறபடுகின்றன. எனவே பேச்சுவார்த்தையை முன்னெடுத்துப்பேச்சு மூலம் சமாதானம் உருவாக அனைத்து சமுதாயமும் அணி திரள வேண்டும்.

இன்று இராணுவக் கட்டுப்பாடு உள்ள யாழ். மாவட்டத்திலேயே டாக்டர்கள் பற்றாக்குறை நிலவுகின்ற போது வன்னியில் மக்கள் படும் துன்பங்களை நான்சொல்லாமலே நீங்கள் உணருவீர்கள்.

வன்னியில் ஒரு போத்தல் மண்எண்ணெய் 270 ரூபாவுக்கு மேல் விற்பனையாகிறது.

நூறு மடங்கு துன்பங்களுக்கு மத்தியில் பல்வேறு பிரச்சினைகளுடன் அங்குள்ள மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

எனவே இவ்வாறான நாடகம் மூலம் முல்லை மாவட்ட பாடசாலைகளின் கல்வி வளர்ச்சிக்கு நீங்கள் செய்யும் சிறு உதவிகள் பேருதவியாக மாறி பேண்தகு நிலையை ஏற்படுத்தும் — என்றார்.

வன்னி மாவட்ட மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ். யூடியும் கலந்து கொண்டு உரையாற்றினார்.

யுத்தத்தினால் அழிவடைந்த முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளின் கல்வி வளர்ச்சிக்காக யாழ். பல்கலைக்கழக முல்லை மாவட்ட மாணவர் ஒன்றியத்தினால் இந்த நாடகம் நடத்தப்பட்டது. (இ-185)

## காங்கிரஸ் எம். பி. வடமராட்சி விஜயம்

வடமராட்சி, டிசெ. 26

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் யாழ். மாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் அ. விநாயகமூர்த்தி வடமராட்சிப் பகுதிக்கு விஜயம் செய்தார்.

இப்பகுதியில் உள்ள அரச திணைக்களங்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், வடமராட்சி வடக்குக் கடற்றொழிலாளர், கூட்டுறவுச் சங்கம், கால்நடை வளர்ப்போர் சங்கம், வைத்திய சாலைகள் ஆகியவற்றுக்கு விஜயம் செய்த அவர் அவை எதிர்கொள்ளும் பிரச்சினைகள், தேவைகள் என்பவற்றைக் கேட்டறிந்தார்.

அவருடன் முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்ட அ. செபஸ்தியானும் வந்திருந்தார், (இ-173)

## நாளை

மார்கழி 12

புதன்கிழமை

திதி: துதியை

பின் இரவு 3.02 வரை.

நட்சத்திரம்: பூராடம்

காலை 7-35 வரை.

சுபநேரம்: 04 58-05.28

ராகுகாலம் 12.28-1.58

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## தார் பரல்கள் கடலில் மூழ்கின

யாழ்ப்பாணம், டிசெ. 26

வலிகாமம் தென் மேற்குப் பிரதேச சபைக்கென 'கிரிந்த' கப்பலில் எடுத்து வரப்பட்ட 100 தார் பரல்களில் இரண்டு பரல்கள் கடலுக்குள் வீழ்ந்து மூழ்கிவிட்டன.

கப்பலில் இருந்து இறக்கித் தரைக்குக் கொண்டுவரும் போதே இந்த இரு தார் பரல்களும் கடலில் வீழ்ந்து மூழ்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

இந்த வருடம் குடாநாட்டில் உள்ள வீதிகளைப் புனரமைப்பதற்கென கொழும்பில் இருந்து ஆயிரத்து 320 தார் பரல்கள் கப்பல்மூலம் எடுத்து வரப்பட்டு பிரதேச சபைகளுக்கும் நகரசபைகளுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-6)

## உதயவாக்கு

ஒரு முறை பேசுமுன் இரு முறை கேள்!

— ஃஸ்ஸைரின்.

# அபிவிருத்தி இணைப்பாளருக்கு நிரந்தர நியமனம் இல்லை

வலி. தென்மேற்கு, டிசெ. 26

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் நியமனம் பெற்ற 14 அபிவிருத்தி இணைப்பாளர்களுக்கும் ஒருவருட பயிற்சி முடிவடைந்து, மேலதிகமாக 7 மாதம் சென்ற நிலையிலும் நிரந்தர நியமனம் வழங்கப் படவில்லை

மேற்படி 14 அபிவிருத்தி இணைப்பாளர்களும் தற்போது கடமைப் பட்டியல் அற்ற நிலையில் பயிலுநர்களாகக் கடமையாற்றி வருகின்றனர்.

இதேவேளை —

தேசிய வரவு செலவுத் திட்டத்தின்கீழ் நியமனம் பெற்ற ஏனைய 286 பட்டதாரிகளுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மிகுதி 14 பட்டதாரி அபிவிருத்தி இணைப்பாளர்களும் நிரந்தர நியமனம் இல்லாது பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-185)

## ஓவியக் கலைஞர் காலமானார்

யாழ்ப்பாணம், டிசெ. 26

தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்களின் ஆஸ்தான ஓவியக் கலைஞர் திருநெல்வேலி விஸ்வப் பிரம்மஸ்ரீ இரத்தினம் கனகராஜா (வயது 50) திருகோணமலையில் நேற்று முன்தினம் காலமானார்.

திருநெல்வேலி கலைவாணி கலையகத்தின் உரிமையாளரான இவர் கடந்த சிலவாரங்களாக நோய் வாய்ப்பட்டிருந்தார்.

ஓவியத்துறையில் சிறந்து விளங்கிய இவருக்கு ஓவியத் திலகம், ஓவிய மாமணி, வர்ண கலைவேந்தன் ஆகிய பட்டங்கள் வழங்கப்பட்டிருந்தன.

திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், நல்லூர் கந்தசுவாமி கோயில், திருகோணமலை ஸ்ரீபத்திரகாளி ஆலயம் போன்றவற்றின் ஓவியக்கலைஞரான இவர் பல இந்து ஆலயங்களின் வாகனங்கள், கோபுரங்கள், தேர்கள் போன்றவற்றில் தனது வர்ண முத்திரையைப் பதித்தவர்.

கலாபூஷணம் [illegible] மணியத்தின் (மணியம் ஆர்ட்ஸ்) சிரேஷ்ட மாணவரான இவர் 'ராஜி ஆர்ட்ஸ்' என்னும் பெயரில் ஓவியங்களை வரைந்து வந்தவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை திருகோணமலை வெலிங்டன் அடை வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருக்கோணமலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். (ஐ-5)

## ஒலிப்பதிவு நாடா

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்கள் நடித்த "வெளிநாட்டு மாப்பிள்ளை" என்னும் சமூக நாடகத்தின் ஒலிப்பதிவு நாடா வெளியீடு விரைவில் நடைபெறவுள்ளது.

வெளிநாடுகளில் வசிக்கின்ற இளைஞர்களின் நடவடிக்கைகளை மையமாக வைத்து இந்த நாடகத்தை கிராம உத்தியோகத்தர் ஆர். துரைராசா நெறிப்படுத்தியுள்ளார். (இ-175)

## மது ஒழிப்பு வீடியோ படக்காட்சி

யாழ்ப்பாணம், டிசெ 26

மது ஒழிப்புச் சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் வீடியோப் படக் காட்சியும் தெருக்கூத்தும் இன்றுபிற்பகல் 3 மணிக்கு மாவிட்டபுரம் கட்டுடையில் இடம்பெறவுள்ளன.

யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறை மாணவர்களின் ஏற்பாட்டில் கொக்குவில் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் இந்நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

இதேபோன்ற நிகழ்வு ஒன்று எதிர் வரும் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆனைக்கோட்டை சாவற்கட்டில் இடம்பெறவுள்ளது.

## கருத்தரங்கு

வலி. தென்மேற்கு, டிசெ 26

நவாலி - ஹேமலதா செல்வராஜா குழந்தைகள் ஞாபகார்த்த நிதிய சிறுவர்களின் பெற்றோர்களுக்கான கருத்தரங்கும், போஷாக்கு உணவுகளும தலைமையகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இதேவேளை —

வறிய சிறுவர்களுக்கு கொப்பிகளும். பாடசாலை உபகரணங்களும் இலவசமாக 3 நிலையங்களில் வைத்து வழங்கப்பட்டன. (இ—185)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி ஜெயராணி வரதராஜா அவர்களின்
அன்புத் தந்தையார்

## ஆசை கந்தையா

அவர்கள் மரணமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயம்.
[82077]

# மரண அறிவித்தல்கள்

## கந்தவனம் நடராசா

[அருமை மாஸ்ரர்]

பண்டித்தறை நெல்லியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தவனம் நடராசா 23—12—2000 சனிக் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரது பூதவுடல் இன்று (26—12—2000) செவ்வாய்க்கிழமை பி. ப. 4 00 மணிக்கு கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார், உற வினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ள வும்.

தகவல்:-
சி. கணபதிப்பிள்ளை JP
(மருமகன்)

நவிண்டில்,
கரவெட்டி.

(82097)

## பஞ்சாட்சரம் விக்கினேஸ்வரன்

(Mech. Eng. London)

ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பஞ்சாட்சரம் விக்கினேஸ் வரன் நேற்று முன்தினம் (24-12-2000) ஞாயிற்றுக் கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு, திருமதி பஞ்சாட் சரம் அவர்களின் மகனும், Dr. ஞானேஸ்வரன் (Mexico), யோகேஸ்வரன் (கனடா), மகேஸ்வரன் (கனடா), அகிலேஸ்வரன் (கனடா), றங்கநாயகி (லண்டன்) மற்றும் திருமதி சண்முகலிங்கம் யோகேஸ் வரி ஆகியோரின் சகோதரனும், திருஞானசம்பந்தர் (பத்தர்-பருத்தித்துறை), காலஞ்சென்ற பாலகிருஷ் ணன் மற்றும் வரதராசா (இ. மி. ச.), றங்கநாதன் (நீர்ப்பாசனம்) ஆகியோரின் அன்பு மருமகனும் ரதி னியின் அன்புக் கணவரும், நந்தகுமாரின் (லண்டன்) மைத்துனரும், திரு. திருமதி செல்வமணியம்நாகரெத்தி னம் அவர்களின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடை பெறும்.

தகவல்:
நா. வரதராசா
(மாமன்)
நாவலடி லேன்,
வண்ணார்பண்ணை.

183, Saguley Road,
Sat Ford,
London.

(82095)

## திருமதி இராமநாதன் செல்லம்மா

சரவணையைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் மத்தியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராம நாதன் செல்லம்மா நேற்று (25-12-2000) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற (கூடம்பத்தை) இராம நாதனின் அருமை மனைவியும், காலஞ்சென்றவர்க ளான கந்தையா, நாகேந்திரன், பொன்னம்மா, நாக முத்து மற்றும் அன்னம்மா ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் பாக்கியலட்சுமி, அமிர்தவல்லி, பரமேஸ்வரி, யோகேஸ் வரி, சிவசுப்பிரமணியம், கனகரத்தினம் ஆகியோ ரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான கனகலிங்கம் தெட்சணாமூர்த்தி, சிவபாதம் மற்றும் திருநாவுக்கரசு, நித்தியானந்தம், இந்திராதேவி, கமலா தேவி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-12-2000) செவ்வாய்க்கிழமை 2. 00 மணிக்கு அவரது இல்லத் தில் நடைபெற்றுப் பூதவுடல் கோப்பாய் மயானத் தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
சிவசுப்பிரமணியம்.
(மகன்)

கிளுவானை வீதி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்

(82114)

# சங்கானைப் பகுதியில் முன்னேற்பாட்டு நடவடிக்கைகளால் கால்நடைகளுக்கு பாதிப்பு இல்லை

வலிகாமம் தெற்கு, டிசெ. 26

சங்கானை கால்நடை வைத்தியர் பிரிவினரால் மேற் கொள்ளப்பட்ட முன்னேற் பாட்டு நடவடிக்கைகளினால் 1998 ஆம் ஆண்டுக்குப் பின் னர் அப் பகுதியில் கால் நடைகளுக்கும், கோழிகளுக் கும் பாதிப்பு எதுவும் எற்பட வில்லை என கால்நடை வைத் திய அதிகாரி பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

1998 ஆம் ஆண்டு இப்பகுதி களில் கால்நடைகளுக்கு கால் வாய் நோய் காணப்பட்டிருந் தது. சுமார் 250-க்கு மேற் பட்ட ஆடுகளும், மாடுகளும் இந்த நோயினால் பாதிக்கப் பட்டிருந்தன.

அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் கால் நடைகளுக்கான கால்வாய் நோய்த் தடுப்பூசிகள் சங் கானை கால்நடை வைத்தியர் பிரிவினரால் போடப்பட்டு வருகின்றன. இதனால் இப் பகுதியில் கடந்த இரண்டு வருடங்களாக கால்நடை கள் எதற்கும் இந்த நோய் ஏற்படவில்லை எனத் தெரி விக்கப்பட்டது.

இவ்வருடமும் தற்போது கால்நடைகளுக்கான தடுப் பூசிகள்போடப்பட்டு வருகின் றன.

இளவாலை, பண்ணாகம், மாதகல், சுழிபுரம், சங் கானை, சித்தன்கேணி பிர தேசங்களில் இவ்வருடம் இதுவரை ஆயிரத்து 419 கால் நடைகளுக்குத் தடுப்பூசி கள் போடப்பட்டுள்ளன.

மேலும் மானிப்பாய், சுது மலை, நவாலி, ஆனைக் கோட்டை போன்ற இடங் களிலும் தடுப்பூசிகள் போடு வதற்கான முயற்சியில் கால் நடை வைத்தியப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர்.

சனசமூக நிலையங்கள் மற்றும் பொது ஸ்தாபனங் கள் ஒழுங்கு செய்து அறி வித்தால் அவ்விடங்களில் சென்று தடுப்பூசிகள் போட முடியும் எனக் கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித் துள்ளார். (ம-152)

## ஒளி விழா

யாழ்ப்பாணம், டிசெ. 26

வலிகாமம் வடக்கு பிர தேச சபையின் வருடாந்த ஒளி விழா நாளை புதன் கிழமை காலை 10 மணிக்கு மல்லாகம் கனிஷ்ட வித்தி யாலயத்தில் நடைபெறும். (ம-5)

## பண்ணிசைப் போட்டி

யாழ்ப்பாணம், டிசெ. 26

தொண்டமானாறு சந்நிதி யான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை திரு வாசக விழாவையொட்டி நடத்தும் பண்ணிசைப் போட்டி நாளை புதன்கிழமை நடைபெறும். (ம)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், டிசெ. 26

காந்திஜி சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் வரு டாந்த விளையாட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பொ. ரவிச்சந்திரன் தலை மையில் வட்டு.சிவன் கோயில் மேற்கு வீதியில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதனும் சிறப்பு விருந்தினர்களாக வலி. மேற்கு பிரதேச சபைச் செயலர் மா. புலேந்திரனும், பாலர் பாட சாலைப் பொறுப்பதிகாரி திருமதி கேமா சிவசோதியும், ஐ.என்.எஸ். நிர்வாக இயக் குநர் திருமதி ரி. ராஜேஸ்வர னும் பிரதேச சபை உப அலு வலக வட்டுக்கோட்டைப் பொறுப்பாளர் எஸ். ஜெய ராஜாவும் கலந்து கொள்வர். (ம)

## ஆயுர்வேத ஆஸ்பத்திரி இடம் மாற்றம்

கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியிலிருந்து ஆனைக் கோட்டைப்பகுதிக்குச் செல் லும் வீதியில் முன்னர் இயங்கி வந்த ஆயுர்வேத வைத்திய நிலையம் தற்போது அதே வீதியில் வசதியான கட்ட டம் ஒன்றுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. (ம-30)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 30 — 08 — 1947

மறைவு 26 — 12 — 1999

## அமரர் நாகலிங்கம் சிவசண்முகநாதன்

(உதவி முகாமையாளர் — மக்கள் வங்கி, யாழ். பல்கலைக்கழகம்)

ஓடி மறைந்தது ஓராண்டு ஓடவில்லை உன்நினைப்பு —
சண்ஐபாவே!
கோடி தவமிருந்தாலும் தேடமுடியுமா உன்னைப்போல்
கரம்பிடித்த மனைவியும் உன்னடியில்
கண்மணிபோல் பெற்றெடுத்த மகளும்வெகு
தொலைவில்
உன்னை நினைக்க ஒருவரில்லை — என்றாலும்
ஒன்றாக வேலை செய்த நாம் என்றும் மறப்போமா?

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
மக்கள் வங்கி, யாழ். பல்கலைக்கழகம்.
(82102)

# ஓராண்டு நினைவலைகள்



## திருமதி ஐயாத்துரை இராசமணி

தோற்றம்: 08 - 07 - 1912

மறைவு: 07 - 01 - 2000

திதி:- 26 - 12 - 2000

அன்பை ஊட்டி அறிவை வளர்த்து
அவனி போற்ற எமை வாழ வைத்த
அன்பு அன்னையே!
ஆண்டு ஒன்றானாலும்
ஆறாது எம் துயரம்
அரன் அடியில் வாழ என்றும் பிரார்த்திக்கும்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

'லவ்லேன்' உடுவில்,
சுன்னாகம்.

(82113)

# சாட்டியிலிருந்து புங்குடுதீவுக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம்

## அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,டிசெ.26

சாட்டியில் இருந்து புங்குடுதீவுக்கு குழாய் நீர் மூலம் குடிதண்ணீர் வழங்கும் பாரிய செயல்திட்டம் ஒன்று புங்குடுதீவில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கொக்குவில் லயன்ஸ் கழகமும் தீவக லயன்ஸ் கழகமும் இணைந்து புங்குடுதீவில் நடத்திய அபிவிருத்திக் கருத்தரங்கின் இறுதியிலே இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இத்திட்டத்துக்கான நிதியினை முன்னாள் அதிபர் செல்வி மகேஸ்வரி சுப்பிரமணியம் வழங்கி ஆரம்பித்து வைத்தார். இத்திட்டத்துக்காக தனிக்கணக்கை வங்கியில் ஆரம்பித்து வெளிநாட்டிலும் உள்ளூரிலும் நிதியைச் சேகரிப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது. இத்திட்டத்துக்காக சாட்டியில் பத்துப்பரப்புக் காணியை வழங்குவதற்கு புங்குடுதீவு ப.நோ.கூ.சங்கத் தலைவர் முன்வந்தார்.

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையை இயக்கும் முகமாக அவ்வூர் மக்களிடம் கையொப்பங்கள் பெறப்பட்டு யாழ்.அரச அதிபர், பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர், புனர்வாழ்வு அமைச்சர், ஜனாதிபதி ஆகியோருக்கு மகஜர்கள் அனுப்புவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தும்புத் தொழிற்சாலைக்குரிய மூலப்பொருள்கள் புங்குடுதீவில் இருப்பதாலும் உற்பத்திச் செலவு குறைவாக இருக்கும் என்பதாலும் தும்புத் தொழிற்சாலை ஒன்றினை புங்குடுதீவில் ஆரம்பிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கருத்தரங்கிற்கு முன்னதாக கொக்குவில் லயன்ஸ் கழகமும் தீவக லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்திய மருத்துவ முகாம் புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்த மருத்துவ முகாமில் 169 பேருக்கு கண்பரிசோதனை நடத்தப்பட்டு 79 பேருக்கு கொக்குவில் லயன்ஸ் கழகத்தினால் கண்ணாடி வழங்கப்பட்டது.

192 பேருக்கு மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டு 183 பேருக்கு அமரர் தையல்நாயகி நடராசா ஞாபகமாக இலவச மருந்து வகைகள் வழங்கப்பட்டன.

இதேவேளை, கொக்குவில் லயன்ஸ கழகத்தினால் புங்குடுதீவு பெருங்காடு சிவன் கோயிலுக்கு ரியூப்லைற் தொகுதி ஒன்றும் வழங்கப்பட்டது.



புங்குடுதீவின் அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். படத்தில் கொக்குவில் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் க.மு.பத்மநாதன், தீவக லயன்ஸ் கழகத் தலைவர் லயன் டாக்டர் க.ராஜரட்ணம், லயன்ஸ் பிராந்தியத் தலைவர் லயன் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம், கொக்குவில் லயன்ஸ் கழகச் செயலாளர் லயன் ரி.ரி.சிவதாசன், புங்குடுதீவு சிவன்கோயில் பிரதம குருக்கள் மற்றும் தீவக லயன்ஸ் கழக உறுப்பினர்கள், மருத்துவபீட மாணவர்கள் ஆகியோர்கள் காணப்படுகின்றனர். (இ)

## படையினரின் பாவனையில் உள்ள

# குருநகர்ப் பகுதி மீனவர்களின் வீடுகளை மீட்டுத்தர வேண்டும்

## விநாயகமூர்த்தி எம்.பியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.26

குருநகர்ப் பகுதியில் இராணுவத்தினரது கட்டுப்பாட்டுக்குள் அவர்களது பயன்பாட்டில் உள்ள மீனவர்களது 400 வீடுகளையும் மீளவும் கடற்றொழிலாளரிடம் பெற்றுத்தருவதுடன் அவற்றுக்கு ஏற்பட்டுள்ள சேதங்களையும் புனரமைத்துத் தர வேண்டும்.

கடந்த வியாழன் பிற்பகல் 1.30 மணிக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசத்தில் நடைபெற்ற கலந்துரையாடலுக்கு வந்திருந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியிடம் கடற்றொழிலாளர் சமாசப் பிரதிநிதிகளால் கோரிக்கை விடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் கடற்றொழில் சமாசத் தலைவர், கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள், கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் மற்றும் வடமராட்சி கடற்றொழிலாளர் சங்க சமாசச் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

✦ கடற்றொழிலாளர்கள் குறைந்தது இரவு 2 மணியில் இருந்து பகல் முழுவதும் கடற்றொழில் செய்வதற்கான அனுமதியைப் பெற்றுத் தர வேண்டும்.

✦ முன்னர் நாம் 45 கடல் மைல் தூரத்திற்குக் கூடச் சென்று கடற்றொழில் செய்து வந்தோம். ஆனால் தற்போது பாதுகாப்பைக் காரணங்காட்டி 500 மீற்றர் தூரமே தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனை 2 கிலோ மீற்றர் தூரம்வரை அதிகரித்து தொழில் செய்ய ஆவன செய்ய வேண்டும்.

✦ கடற்றொழிலாளரது மீனவ நிவாரணங்களை நிறுத்தத் திட்டமிடப்படுவதாக அறிகின்றோம். நிவாரணத்தை நிறுத்தாமல் வழமைபோல் தொடர்ந்து தருமாறு கோரிக்கை விடுக்கின்றோம்.

✦ குருநகர்ப்பகுதி மீனவர்களுக்கு எந்தப் பகுதியிலாவது ஒரு மீனவ குடியேற்றத்தை அமைத்துத் தர வேண்டும். இதற்குரிய காணிகளைக் கொள்வனவு செய்துதர மீனவர்கள் தயாராக உள்ளனர்.

✦ யாழ்.பல்கலைக்கழகத்தில் கடற்றொழில் டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்கள் எந்தவிதமான தொழிலும் இல்லாமல் இருக்கிறார்கள். இவர்களுக்கு கரையோரப் பாடசாலைகளில் கடற்றொழில் சார் பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட வேண்டும் எனவும் மீனவர்கள் சார்பில் பிரதி நிதிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி கல்வி அமைச்சருடன் தொடர்புகொண்டு ஆசிரியர் நியமனம் தொடர்பாக உடன் நடவடிக்கை எடுப்பதாகவும் -

ஏனைய விடயங்கள் தொடர்பாக கடற்றொழில்துறை அமைச்சுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாகவும் -

மீனவர்களது அனைத்துப் பிரச்சினைகள் தொடர்பாகவும் நாடாளுமன்றக் கூட்டத்தில் எடுத்துக் கூறி உரிய நடவடிக்கையை எடுக்க அழுத்தம் கொடுப்பேன் எனவும் -

உறுதியளித்தார். (ம-6)

# இளம் ஆய்வாளருக்கான கருத்தரங்குத் தொடர்

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்க தூய விஞ்ஞானப் பிரிவு நடத்தும் இளம் ஆய்வாளர்களுக்கான ஆய்வு முறையியல் கருத்தரங்குத் தொடர் நாளை புதன்கிழமை முதல் பெப்ரவரி 14ஆம் திகதி வரையிலான ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் பிற்பகல் 3.30 மணிக்கு விஞ்ஞானபீட தாவரவியல் துறை மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் 10 அறிஞர்கள் கலந்து கொண்டு கருத்துரை வழங்குவார்கள். இதில் கலந்து கொண்டு தமது ஆய்வுத் திறன்களை வளர்க்க விரும்புவோர் யாழ்.பல்கலைக் கழக தாவரவியல்துறையில் நாளை காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிக்கு இடையில் தமது விவரங்களைப் பதிவு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரிக்கு வெளிநோயாளர் பிரிவுக் கட்டடம்

நெல்லியடி,டிசெ.26

2001ஆம் ஆண்டு பிரமாண அடிப்படையிலான மூலதன நிதி மூலம் வல்வெட்டித்துறை நகரசபை வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனையில் 2 லட்சம் ரூபா செலவில் வெளிநோயாளர் பிரிவுக் கட்டடம் ஒன்றை அமைக்கவுள்ளது.

இதேவேளை இந்நிதி ஒதுக்கீட்டில், ஆதிகோயில் கடற்கரை வீதி 2 லட்சம் ரூபா செலவிலும், மாதிரிப் பாலர் பாடசாலை 2 லட்சம் ரூபா செலவிலும், ஊறணி நீரூற்று பெண்கள் பகுதி தீர்த்தக் கேணி 2 லட்சம் ரூபா செலவிலும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

விரைவில் இந்நிதியை ஒதுக்கித் தருமாறு, வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் எம்.கே.சிவாஜிலிங்கம், உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-109)



சித்தன் கேணி 'சுப்றா' கல்வி நிலைய பரிசுத் தின விழா அண்மையில் நடைபெற்றது. வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவரும் வட்டுக்கோட்டைத் தொகுதி ஈ.பி.டி.பி. அமைப்பாளருமான ந.திரிலோகநாதன் மாணவி ஒருவருக்கு கேடயமும் பரிசும் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

*(படம் : தாஸ் போட்டோ)*



நெடுந்தீவு பிரதேச சபைக்கு அண்மையில் 15 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா செலவில் புதிய டிராக்டர் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது. அதன் வெள்ளோட்ட விழா நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம் முன்பாக நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். பிரதேச சபைத் தலைவர் உட்பட சபையின் உத்தியோகத்தர்கள் படத்தில் காணப்படுகின்றனர். (இ-7)



வழுக்கையாறு புனரமைப்புத் திட்டத்தின் கீழ் புதிதாக அமைக்கப்பட்ட முதலியார் குளத்தின் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு-கிழக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் பொறியியலாளர் எஸ்.செல்வரத்தினம் குளத்தைத் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் யாழ்.கமநலசேவை திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன், யாழ்.பிரிவு பொறியியலாளர் ரி.கணேசராசா ஆகியோரும் காணப்படுகின்றனர்.

*(படம்: சண்டிலிப்பாய் செய்தியாளர்)*

## இடம் பெயர்ந்த தென்மராட்சி மக்கள்

# கொடிகாமம் பொலீஸ் நிலையத்திலும் முறைப்பாடுகளைப் பதிவு செய்யலாம்

வண்ணார்பண்ணை,டிசெ.26

தென்மராட்சியிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள், தமது குறைபாடுகளையும், முறைப்பாடுகளையும் கொடிகாமத்தில் உள்ள பொலீஸ் நிலையத்திலும் -

இடம்பெயர்ந்து அவர்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள பொலீஸ் நிலையங்களிலும் -

பதிவு செய்யலாம் என வடபகுதி சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் தமக்கு அறிவித்துள்ளார் எனத் தென்மராட்சிப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (ம-74)

## நிவாரண விநியோக மதிப்பீடு:

# கிராம சேவையாளர்களுக்கு உதவியாக நால்வர் குழு

வலி.மேற்கு,டிசெ.26

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் உலர் உணவு நிவாரண விநியோக மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு கிராம உத்தியோகத்தர்களுடன் நான்கு பேர் கொண்ட குழு ஒன்றினை பிரதேச செயலர் நா.வேதநாயகன் நியமனம் செய்துள்ளார்.

குழு உறுப்பினர்களாக அரச சார்பற்ற பொது அமைப்புகளில் இருந்து பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த குழுவினரே உலர் உணவு நிவாரணத்தை பெறுவதற்குத் தகுதியான குடும்பங்களைத் தெரிவு செய்வார்கள். (இ-175)

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம்,டிசெ.26

யாழ்.போதனா வைத்தியசாலை குழந்தைகள் வைத்திய நிபுணர் கலா சோமசுந்தரம் மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கிக் காயமடைந்தார்.

யாழ்ப்பாணப் பகுதியில் நேற்று இடம்பெற்ற இச் சம்பவத்தில் அவரது மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம)

# நத்தார் மகிழ்ச்சி நீடிப்பதற்கு போர் ஓய்வு நீடிக்க வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் நத்தார் செய்தி

யாழ்ப்பாணம்,டிசெ.26

இறைமகன இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும இந்நாளில் மகிழ்ச்சி எல்லோருக்கும் அவர்களது வாழ்நாள் முழுவதும் நீடிக்க வேண்டும். இதற்கு போர் ஓய்ந்து அமைதி நிலவ வேண்டும்.

இவ்வாறு வடபகுதி அபிவிருத்தி புனர்வாழ்வ புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகார அமைச்சரும், ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா வெளியிட்டுள்ள நத்தார் வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்த மகிழ்ச்சி நீடித்து நிலைபெற வேண்டுமாயின் போர் ஓய்ந்துபோக வேண்டியதும், யுத்தத்தின் சத்தமானது அகன்று செல்ல வேண்டியதும் அத்தியாவசிய தேவையாகும்.

முகத்தில் புன்னகை பூக்கச் செய்வது சமாதானத்தின் அறிகுறியாக எண்ணப்படுகின்றது. ஆம் புன்னகையே சமாதானத்தின் ஆரம்பம்.

இன்று கிறிஸ்துவின் பிறப்பினைக் கொண்டாடும் ஒவ்வொருவருக்கும் எமது நல்வாழ்த்துக்களை வெளிப்படுத்துகின்றோம்.

மானிட குலத்தின் வாழ்வு என்பது சமாதானததை நோக்கிய பயணமாகும். சிதைவுண்ட வாழ்க்கையையும் உடைந்து போன ஒற்றுமையையும் நொறுங்கிப் போயிருக்கும் ஐக்கியத்தையும் மீட்டு எடுத்து மீளமைப்பது வாழ்கையை செப்பனிடும் பாதையில் முதல்படி ஆகும்.

அதற்காக தோழமை பூண்ட நெஞ்சத்தினராய் கரம்குலுக்கி கொள்ள வேண்டிய தேவை இம் மண்ணில் வாழும் ஒவ்வொருவருக்கும் உள்ளது.

எனவே உண்மைகளை உண்மைகளாக ஏற்று நிதானமாகவும் விவேகமாகவும் செயற்பட எல்லோருக்கும் இறையருள் சித்திக்க வேண்டும் என இந்த கிறிஸ்துவின் பிறப்பு பெருநாளில் வேண்டுகின்றோம். இப்படி அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-5)

### திருமலையில் குமாரின் நினைவு தினம்

திருகோணமலை,டிசெ.26

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் முதலாவது ஆண்டு நினைவு தினம் எதிர்வரும் 5ஆம் திகதி திருகோணமலையில் அனுஷ்டிக்கப்பட உள்ளது.

குமாரின் நினைவு தினத்தை யொட்டி அன்றைய தினம் கோணேஸ்வரர் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் நடத்தப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை அகில இலங்கைத் தமிழக் காங்கிரஸ் கட்சியின் திருகோணமலைக் கிளை செய்து வருகிறது. (ம-5)

### துணுக்காயில் எலும்புக்கூடு மீட்பு

வவுனியா,டிசெ.26

துணுக்காய் காட்டுப் பகுதியில் வயோதிபர் ஒருவரின் எலும்புக்கூடு மீட்கப்பட்டுள்ளது.

துணுக்காய் காவல்துறையினரால் மீட்கப்பட்ட இந்த எலும்புக்கூடு மல்லாவி வைத்தியசாலையில் வைக்கப்பட்டது.

இந்த எலும்புக்கூடு துணுக்காய் கொக்காவிலைச் சேர்ந்த சின்னையா செல்லப்பா (வயது 67)என்பவருடையது என்று அடையாளம் காணப்பட்டது. (ம-7)

## திருமலையில் 2500பேர் காத்திருப்பு

கப்பல் மூலம் யாழ்ப்பாணம் செல்வதற்காக திருகோணமலையில் காத்திருக்கும் 2ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக இவர்கள் கப்பலை எதிர்பார்த்துக் காத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் 250 பேர் திருகோணமலை நவீன சந்தைக் கட்டடத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் - ஏனையவர்கள் பல்வேறு இடங்களில் தங்கியுள்ளதாகவும் - தெரிய வருகிறது.

திருகோணமலைக்கும் பருத்தித் துறைக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபட்ட 'சிற்றி ஒவ் றிங்கோ' 'கப்பல் சீரற்ற காலநிலை காரணமாக ஒரு மாதத்திற்கு மேலாக இந்தச் சேவில் ஈடுபடவில்லை என்பது தெரிந்ததே. (ம-5)


## கண்ணீர்க் காணிக்கை

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர்
**க.ரதிதரன்** அவர்களின் அன்புத் தந்தையார்
**தம்பையா கதிரேசு**
அவர்கள் காலமானதையிட்டு, அவருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கை ஆக்குவதுடன், அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

4ஆம் வருட நாடகமும் அரங்கியலும்
சிறப்புக்கலை மாணவர்கள்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(C/14454)

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

2000-12-26



## செல்வி அ. ஜெனிக்கா

வேலணை மேற்கு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த
**அருள்நாயகம் சகிதாதேவி** தம்பதிகளின்
அன்பு மகள் **செல்வி ஜெனிக்கா**

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். ஜெனிக்காவை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, தாத்தா, அப்பம்மா, அப்பப்பா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், சித்தப்பாமார், சித்திமார், அக்காமார், அத்தான்மார், மச்சாள்மார் ஆகியோர் வேலணை முத்துமாரி அம்மன் அருளால் சகல செல்வங்களும் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தே.அருள்நாயகம்
*வேலணை - 06*

- குடும்பத்தினர்.

(81955)

## ஈராண்டு நினைவலைகள்



புவியில் 11 - 10 - 1946

விண்ணில் 20 - 12 - 1998

**திருமதி இராஜேஸ்வரி சிவகுமார்**

திதி:- 26 - 12 - 2000

ஆறாத் துயரில் ஈராண்டுகள்.

*"குமரோதயம்"*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

*கணவர்:-* **ந.சிவகுமார்**
(மாவட்ட புள்ளிவிவரவியலாளர்,
கச்சேரி, யாழ்ப்பாணம்.)
*மகள்:-* **ஆர்த்திகா.**

(81835)

## 4ஆம் வருட நினைவலைகள்



பிறப்பு 24 - 12 - 1935

இறப்பு 10 - 01 - 1997

அமரர்
**வேலப்பன் சண்முகசுந்தரம்**
(சுந்தரப்பா)
**திதி: 26-12-2000**

அன்புத் தெய்வமே! ஆருயிர் அப்பாவே!!
நான்கு வருடமானாலும் உங்கள்
நினைவுகள் எம்மை விட்டு அகலாது

*உங்கள் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கின்றோம்.*


*164,இராமலிங்கம் வீதி,*
*முடமாவடி, நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

(82044)

தங்கள் பிரிவால் வாடும்
**குடும்பத்தினர்.**

## 2ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

மலர்வு 24 - 01 - 1948



உதிர்வு 26 - 12 - 1998

அமரர் **பொன்.மதிமுகராஜா**

(முன்னாள், அனைத்துலக எம்.ஜி.ஆர். பேரவைத் தலைவரும், வடபிராந்திய மினிபஸ் சங்கத் தலைவரும், அகில இலங்கை சமாதானநீதிவானும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும், திருமுருகன் களஞ்சிய உரிமையாளரும்.)

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*தாவடி.*

(81938)

- குடும்பத்தினர்.

பொது சன நூலகம்

# நிவாரண வெட்டினால் மக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களை அரசும் அதிகாரிகளும் உணர வேண்டும்

## அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் அறிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.26

நிவாரண வெட்டை அமுல் செய்வதினால் நிவாரணம் பெறும் குடும்பங்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள் பல மடங்குகளாகும் என்பதனை அரசாங்கமும் அதிகாரிகளும் உணர வேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்டத்தில் அமுல் செய்யப்படவுள்ள நிவாரண வெட்டுத் தொடர்பாக யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின இணையம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதி நேற்று வெளியாகியிருந்தது. அதன் முழு விவரம் வருமாறு:-

யாழ்.குடாநாட்டில் இன்று வாழும மக்கள் பல்வேறு இன்னல்கள் இடர்பாடுகளுடன் கூடிய அவல வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 65 ஆயிரம் பேர் 10 வருடங்களுக்கு முன்பு இடம்பெயர்ந்து பாதுகாப்புக் கட்டுப்பாடுகளினால் சொந்த இடங்களில் மீளக் குடியேற முடியாத நிலையில் முகாம்களிலும், தனியார் வீடுகளிலும் வசிக்கின்றார்கள். 1 லட்சத்து 70 ஆயிரம் பேர் 2 ஆயிரம் ஆண்டு மார்ச் மாதத்தின் பின் சொந்த இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து முகாம்களிலும், கைவிடப் பட்ட,'பாவனையற்ற, உறவினர், நண் பர்கள் வீடுகளிலும் வசிக்கின்றனர். யாழ்.குடாநாட்டில் வசிக்கும் மொத்த சனத்தொகையில் கிட்டத்தட்ட 50 சதவீதமானவர்கள் இடம்பெயர்ந்த நிலையில் உள்ளனர். மிகுதி 50 சதவீதத்தினரும் முன்பு இடம்பெயர்ந்து மீளக் குடியேறிய நிலையில் உள்ளனர்.

மேற்குறிப்பிட்ட மக்களின் கஷ்ட நிலை காரணமாக உலர் உணவு நிவாரணம் அரசாங்கத்தினால் வழங்கப்படுகிறது. உதாரணமாக 5 பேர் கொண்ட குடும்பமொன்றுக்கு மாதாந்தம் 1,260 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. போசாக்கு நியமத்தின்படி மனிதனின் தேகாரோக்கியத்துக்கு ஒரு ஆளுக்கு 2,600 கலோரி நாளொன்றுக்குத் தேவைப்படுகிறது.

இன்றைய வாழ்க்கைச் செலவின் படி போசாக்கைக் கருத்தில் கொள்ளாத 3 நேர உணவுக்கு 5 பேர் கொண்ட குடும்பமொன்றுக்கு 5 ஆயிரம் ரூபா மட்டில் ஒரு மாதத்துக்குத் தேவைப்படும். அரசின் நிவாரண உதவி இதில் கால் பங்கையே ஈடுசெய்யும். மிகுதிக்கு என்ன செய்கின்றார்கள்? கூலித் தொழில்களையே தேடி அலைகின்றார்கள்.

விவசாயம், மீன்பிடி, சிறு கைத்தொழில் ஆகிய தொழில் முயற்சிகள், பாதுகாப்புக் கட்டுப்பாடுகள், மூடிய பொருளாதாரம், வெளியூருக்கான போக்குவரத்துச் சிக்கல்கள், உற்பத்திப் பொருள்களுக்கு சந்தை வாய்ப்பின்மை ஆகிய காரணிகளால் போதிய வருமானமின்றி முடங்கிப் போயுள்ளனர். இதனால் மீளக்குடியேறிய மக்கள் தமது வாழ்க்கைச் செலவிற்கான வருமானத்தைத் தொழில்கள் மூலம் பெறமுடியாது தத்தளிக்கின்றார்கள். தொழில் முயற்சிகள் முடங்கி இருப்பதனால் தொழில் வாய்ப்புகள் அற்ற நிலையில் இடம்பெயர்ந்த மக்கள் கூலித் தொழில் மூலமேனும் சிறு வருமானம் ஈட்ட முடியாத நிர்க்கதி நிலையில் உள்ளனர்.

ஆகவே நிவாரண வெட்டை அமுல் செய்வதனால் அவர்கள் எதிர்நோக்கும் சங்கடங்கள் பல மடங்காகும் என்பதை அரசாங்கமும் அதிகாரிகளும் உணரவேண்டும்.

மீளக்குடியேறிய மக்களும், இடம்பெயர்ந்த மக்களும் கடும் துயரங்களை சர்வதேச நிறுவனங்களுக்கும், வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் எடுத்துக் கூறி மேலதிக உணவு உதவியினைப் பெறுவதற்கு இணையம் முயற்சி செய்கின்றது. இவ்வேளையில் நிவாரணத்தை மேலும் வெட்டுவதற்கு எடுக்கப்படும் முயற்சி மக்களால் 'ஜீரணிக்கமுடியாத ஒரு செயலாகக் கருதப்படுகிறது.' பட்டினியால் மக்கள் இறக்கவில்லை என காரணம் காட்டி நிவாரண வெட்டை நியாயப்படுத்தும் அர்த்தமற்ற விதண்டாவாதங்களும் முன்வைக்கப்படுகின்றன.

யதார்த்த நிலையை ஆராய்ந்தால் மக்களின் தேகாரோக்கிய நிலை பெரும் பாதிப்புக்குள்ளாகியிருப்பதை புள்ளி விவரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. மருத்துவப் பேராசிரியர் அண்மையில் கருத்தரங்கு ஒன்றில் இதை தெளிவுபடுத்துவதற்காக நாம் இன்று ஆராயவேண்டியது "**Mortality Rate**" அல்ல "**Morbidity Pattern**" என விளக்கினார்.

ஒரு வருடத்திற்கு முன்பு "நிவாரண வெட்டு" முயற்சி அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டபோது பாதிக்கப்பட்ட மக்கள், தொண்டர் நிறுவனங்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் எதிர்ப்பினால் கைவிடப்பட்டது. அன்றைய வாழ்க்கை நிலையை விட இன்றைய வாழ்க்கை நிலை எவ்விதத்திலும் முன்னேற்றமடையாத பொழுதிலும் நிவாரண வெட்டை மீளவும் அமுல் செய்ய தீர்மானித்தது ஏன்? என்பதை மக்கள் அறிய ஆவலாக உள்ளனர்.

யாழ்.குடாநாட்டின் தற்போதைய நிலை இயல்பு நிலைக்கு மாறியபின் அதாவது மக்கள் சுயமாக தொழிலை மேற்கொண்டு அதற்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு போதிய வருமானம் ஈட்டக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டபின் நிவாரண வெட்டைப் பற்றிச் சிந்திக்கலாம்.

நாட்டில் யுத்த அனர்த்தங்களின் மத்தியிலும் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்ததன் விளைவு நிவாரண வெட்டே என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நிவாரண வெட்டினால் மீதப்படுத்தும் பணம் யுத்தத்தை முனைப்புடன் முன்னெடுத்து மக்களின் அழிவுக்கே வழிகோலும் என மக்கள் கவலையடைகின்றனர்.

ஆகவே 31.12.2000 இற்குள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தின் நிவாரண வெட்டுத் தீர்மானத்தை நிறுத்தாவிடின் மக்களின் வெகுஜனப் போராட்டம் தவிர்க்க முடியாததாகிவிடும் - இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

## ஒளிவிழா

சண்டிலிப்பாய்,டிசெ.26

சில்லாலை சூசையப்பர் வாலிபர் சங்கத்தின் கிறிஸ்மஸ் ஒளிவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. சில்லாலை பங்குத்தந்தை அருட்திரு ரெஜி இராஜேஸ்வரன் அடிகளார் இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். (ஐ-135)

## கப்பலில் வந்த குளிர்சாதனப் பெட்டிகள் இறக்கப்படவில்லை

யாழ்ப்பாணம்,டிசெ.26

யாழ்.ஆஸ்பத்திரிக்கு என செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் கப்பலில் எடுத்துவரப்பட்ட ஐந்து குளிர்சாதனப் பெட்டிகளும் மீண்டும் திருகோணமலைக்கு திருப்பி எடுத்துச் செல்லப்பட்டன.

கடந்த செவ்வாய்க்கிழமை பருத்தித்துறைக்கு வந்த செஞ்சிலுவைச் சர்வதேச்குழுக் கப்பலில் யாழ்.ஆஸ்பத்திரிக்கு மருந்துப் பொருள்களும் ஒக்சிசன் சிலிண்டர்களும் இந்தக் குளிர்சாதனப் பெட்டிகளும் எடுத்து வரப்பட்டிருந்தன. பெரும் கடற்கொந்தளிப்பு நிலவியதால் குளிர்சாதனப் பெட்டிகள் தவிர்ந்த ஏனைய பொருள்களை மட்டுமே கப்பலில் இருந்து இறக்க முடிந்தது. (ஐ-3)

## பனைமரங்கள் கணக்கெடுப்பு

காரைநகர்,டிசெ.26

காரைநகர் பகுதியில் கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக பனைமரங்களைக் கணக்கெடுக்கும் பணியில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள சமுர்த்தி செயலணி உறுப்பினர்களையும் இந்தப் பணியில் ஈடுபடுத்தி வருகின்றனர். (ஐ-72)

# கிளிநொச்சி வைத்தியசாலையில் 3 மாதங்களில் 42 பேர் உயிரிழப்பு

வவுனியா,டிசெ.26

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் போதிய மருந்துகள் இல்லாமையினால் கடந்த மூன்று மாதங்களில் 42 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர்களில் ஏழு பேர் குழுந்தைகள்.

இரத்தச் சோகை நோயினால் பாதிக்கப்பட்ட நிலையில் இந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 41 பேரில் 6 பேர் இந்தக் காலப் பகுதியில் உயிரிழந்துள்ளனர்.

12 வயதுக்கு உட்பட்ட 83 சிறுவர்கள் போஷாக்கின்மையால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட நிலையில் இங்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

கடந்த மூன்று மாதங்களிலும் வெளிநோயாளர் பிரிவில் 46 ஆயிரத்து 527 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களில் 2 ஆயிரத்து 730 பேர் மலேரியாவினாலும், 8 ஆயிரத்து 188 பேர் காய்ச்சலினாலும், 133 பேர் விசர் நாய்க்கடியினாலும் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.(ம-5)

# பல லட்சம் மக்களைப் பாதிக்கும் பாதீனியம்

**குடாநாட்டில் பரவிவரும் 'பாதனியம் களையை அழிக்கும் பாதீனியம் ஒழிப்பு வாரம்' ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனையொட்டி கடந்த ஞாயிறன்று உதயனில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி இது. மிகுதி பின்னர் வெளியாகும்.**

★ *பயன்கள்:* காகித அட்டைகள், இயற்கை இறப்பர்த் தாவரம், எரிவாயு உற்பத்தி அதிகரிக்கும், பசுந்தாள் உரம், ஒக்சாலிக அமிலம், புற்றுநோய் மருந்து, இந்தப் புற்று நோய் மருந்து புற்றுநோய்க்கலங்களை மட்டும் அழிக்காமல் நல்ல உயிர்க்கலங்களையும் அழித்துவிடும் அபாயம் உள்ளது.

★ மேலதிக பயன்களாக:-

☆ கோவாப் பயிரின் இலையரி புழுவின் உணவு உட்கொள்ளும் தன்மையை நலிவுறச் செய்தல் (**Antifeedent**)

☆ நெல்லில் ஏற்படும் எரிபந்த நோயை (**Blast**) தோற்றுவிக்கும் பைரிகுளேரியா ஒறைசே என்னும் பூஞ்சண எதிர்ப்புத் தன்மை (**Antifungal**)

☆ நிலக்கடலை, உழுந்து, பயறு போன்ற தாவரங்களின் இலைவெட்டி உண்ணும் புரோடீனியா புழுவிற்கு தொடுகை மூலமான நஞ்சாகவும்,

☆ வெண்டியில் சாறு உறுஞ்சும் பூச்சிக்கு பூச்சிக் கொல்லியாக

☆ வேறு சில பூச்சி பீடைகளின் வளர்ச்சியை நிரோதித்தல் (**Inhivitor**) என்பனவும் அறியக்கூடியதாக உள்ளது.

*பயனா? பாதிப்பா? எது அதிகம்??*

கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் தனது அறிக்கை மூலம் 'பாதீனியத்தால் ஏற்படும் பயன்களைவிட பாதிப்பே அதிகம் என்பதால் அனைவரும் முயன்று அதனைக் கட்டுப்படுத்தியே தீரவேண்டும்' என்கிறது. சென்னை வேளாண்துறை இயக்கம், 'பாதீனியம் ஓர் ஊரினை முற்றுகையிடும் முன்பே அதனைத் தடுத்திடல் வேண்டும். (இவ்விடத்து நம்மவர் சற்று ஆழ்ந்து கவனித்தல் நல்லது நிச்சயமாக யாழ்குடாநாட்டை ஆக்கிரமிக்க முன்பு 'ஒட்டசடக்கியாக' பல்கிப்பெருகும் பாதீனியக் களையை தடுத்திடல் வேண்டும்!!) பசுந்தாள் உரமாகப் பயன்படும் என்பதெல்லாம் அதனைக் கட்டுப்படுத்துவதற்காகவே அன்றி, பயிரிடுவதற்காகவல்ல' என்று அறிக்கை மட்டும் விட்டது.

★ *பாதிக்கப்பட்டோர் - பல இலட்சம் பேர்!!*

★ *பாதிப்பு*

மனிதனில் :- அரிப்பு, சிவப்புத் தடிப்புகள், படை, கொப்பளங்கள், மூக்கடைப்பு, மூக்கில் நீர்வடிதல், தும்மல், சளி, காய்ச்சல், ஆஸ்துமா நோயாளிகள் மூச்சு விடக்கஷ்ரப்படுதல்.

★ *விலங்குகளுக்கு :*

மேலே கூறிய அனைத்துப் பாதிப்புக்களுடன் மேய ஒன்றுமில்லாமல் பாதீனிய இரை எடுக்கும் ஆடு மாடுகளின் பால் கசக்கும். அதில் பார்த்தெனின் எனும் "அல்கலொயிட்" விஷம் அப்படியே உள்ளது. அது மனிதர்களின் உபயோகத்திற்கு லாயக்கற்றது. பாதீனியமும் தண்ணீரும் மட்டும் உணவாகக் கொடுக்கப்பட்ட மாடுகள் குடல புண், நாக்கு, வாய்ப்புண் வந்து, தோல் நிறமிழந்து மாண்டன என்பது பெங்களூர் ஆய்வு.

★ *பயிர்களுக்கு :*

1) பயிர் செய்யும் தாவரங்களின் குறிகளில் பாதீனிய மகரந்தங்கள் விழுவதால் கருக்கட்டல் பாதிப்படையும்.

2) வேர், இலை, தண்டுப் பகுதிகளில் இருந்து வெளிவரும் சுரப்புகள் பயிர் விதை முளைத்தலையும் பயிர் தாவர வளர்ச்சியையும் நிரோதிக்கும்.

3) வேர் சுரப்புகள் பயிர் தாவர வேரின் விருத்தியை நிரோதிக்கும்.

4) அவரையின பயிர்களில் "இறைசோபியம்" பக்றீரியாவின் ஒன்றிய வாழ்வின் மூலம் உருவாகும் வேர் முடிச்சுக்களால் தழைச்சத்து மண்ணில் நிலைநாட்டப்படுவது பாதிப்புறுகிறது.

5) ஒட்டு மொத்தமாக பயிர் விளைச்சல் அல்லது மகசூல் குறைவடையும்.

6) சிற்றினத் தாவரங்கள் பூண்டோடு அழிக்கப்பட்டுவிடும்.

★ *பாதிப்பின் உச்சக்கட்டம்:-*

ஊர் இயற்கை அழகினை இழத்தல் (ஏற்கனவே உடைந்து நொறுங்கி அரைகுறையாக இடிந்து விழாது நிற்கிறது எமது ஊர்), ஆடுமாடுகளின் பால் கசத்தல், பாதிக்கப்பட்டோர் குடிபெயரல் (ஒருவேளை திட்டமிட்டு எம் மக்களை இன்னொருதரம் குடிபெயரச் செய்த சதியாய் இருக்குமோ? யாரறிவார்?)

★ *பாதீனியத்தின் எதிரிகள்:-*

☆ அக்கணமே அழிக்கும்:- பூக்காத களையை அப்புறப்படுத்தும் கைகள்.

☆ அன்றே அழிக்கும் எதிரி:- 20% உப்பு - சவர்காரக் கரைசல்

☆ நின்றே அழிக்கும் எதிரி:- காசியா செறிசெயா செடிகள் (ஒரு வகை வட்டத்தகரை குடும்பத் தாவரங்கள்).

> **கு.மிகுந்தன்**
> *தலைவர்*
> *விவசாய உயிரியல் துறை*
> *விவசாயபீடம்*

☆ தின்றே அழிக்கும் எதிரி:- சைக்கோகிராமே பூச்சிகள். (யாழ். குடாநாட்டில் இன்னும் கண்டறியப்படவில்லை)

☆ உடனின்றே அழிக்கும் எதிரிகள்:- தகரை, பொன் ஆவாரை, ஆவாரை.

☆ இயற்கையாக அழிக்கும் எதிரிகள்:- மழைக்கு முளைக்கும் புற்பூண்டுகள்.

★ *மக்கள் இயக்கமாக மாற்றல்:*

ஒவ்வொரு வீட்டிலும் அன்றாடம் சலவைக்குப் பின் மீதமுள்ள கழிவு (சோப்பு நீரில் 5 பங்குக்கு 1 பங்கு சமையல் உப்பைக் கரைத்தும் வெயிலில் வீட்டைச் சுற்றியுள்ள களையின் மீது தெளிக்கலாம்.

☆ *பூத்த பாதீனியத்தை கட்டுப்படுத்த:*

5 லீற்றர் நீரில் 5 கிராம் சலவை சோப்பு 1 கிலோ சமையல் உப்பு ஆகியவற்றைக் கரைத்து வெயிலில் விஷக்களையின் மீது தெளித்தல், களை 5 நிமிடங்களில் வாடிவிடும் இம்முறைக்கு புறச்சுவாலூடு பரவல் முறை எனப்படும்.

பாதீனியத்தைக் கட்டுப்படுத்த மிக எளிய வழியாக பூக்கும் முன்னரேயே வெறும் கைகளால் வேருடன் இளம் பாதீனியச் செடிகளைப் பிடுங்கி ஆழத் தோண்டிய உரக் குழியினுள் போடுவது அல்லது எரிப்பது. பூத்திருப்பின் கையுறைகளையும், மூக்கு, வாய் போன்ற பகுதிகளை மூடி துணியும் அணிவது நல்லது. இங்கு முக்கியமான விடயம் யாதெனில் பூக்குமுன்பு பாதீனியத்தின் இலைகள் சீதேவியின் செங்கிழுநீர், மூக்குத்திப் பூண்டு, செவ்வந்தி போன்றவற்றின் இலைகளிலிருந்து வேறுபடுத்த முடியாமல் இருப்பதால் சிறந்த முறையில் இதனை இணங்காண விளக்கமளிக்கப்படுதல் நல்லது.

☆ *பாதீனியத்தின் பரம எதிரி செடி:*

இந்தியாவில் கருநாடகா மாநிலத்தில் காணப்படும் காசியா செரிசெயா பாதீனியத்தின் பரம எதிரியாகக் கண்டறியப்பட்டுள்ளது. இது பாதீனியத்தைவிட நல்ல பசுந்தாள் உரம். காசியாவின் இலை மற்றும் விதையின் சாறு இறங்கும் இடங்களில் கோடிக்கணக்கான பாதீனிய விதைகள் இருந்தாலும் அவை முளைப்பதில்லை என பெங்களூர் வேளாண் அறிவியல் பல்கலைக்கழகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. காசியா செரிசெயாவில் உள்ள கோலின்ஸ் (**Kolines**) தான் இதற்கு காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

காசியா விதைகள் பூமியினுள் மட்கி, பருவ மழைக்கு மட்டும் முளைக்கும் தன்மையுடையன. விதை 2 நாள்களில் முளைத்து 45 நாள்களில் மஞ்சள் நிற பூ பூத்து பாசிப்பயறு போன்ற காய்களைக் காய்க்கும். காய்களை 15 நாள்களுக்கு ஒருமுறை சேகரிக்கலாம். (இதன் பயன்பாட்டினை எமது பிரதேசத்திலும் பரீட்சித்துப் பார்க்கலாம். ஆனால் காசியா இங்கு இன்னொரு களையாக வந்து விடக்கூடாது. அழகுக்காக நம்மவர்களால் தேடிப்பிடித்துக் கொண்டுவந்து பூந்தொட்டிகளில் வளர்த்து அதன் அழகை இரசித்த வேளை அது பல்கிப்பெருகி இப்போது வயல்கள் காணிகளில் பற்றை மண்டி கிடக்கும் தூரத்தை இனங்காண முடிகிறதா.? அதுதான் நாயுண்ணி எனும் லன்ரனா கமறா எனும் செடி காணிகளில் பெருக்கமடைந்து பல்வேறு நிறங்களுடைய பூக்களுடன் நிமிர்ந்து நிற்கத்தான் செய்கிறது. ஆனால் ஏனோ தெரியவில்லை அதன் அழகை நம்மவர் இப்போது ரசிப்பதில்லை.)

காசியா அல்லது தகரையின் இயல்புடைய நம்மூர் தாவரம் இருப்பின் மிகவும் நல்லது. இதற்கான ஆய்வு விவசாய பீடத்தில் நடத்தப்படுகிறது.

(வளரும்)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள **MD-90-RX.100** மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **No.57,** நாவலடி லேன் (காளிகோயிலடி) திருநெல்வேலி. (82158)

கெருடாவில் தெற்கு தொண்டமனாறு 3 ஆம சந்தியில் கடை ஒன்று இரு அறைகளுடன் மலசலகூட வசதியுடைய 3 பரப்புக் காணி, தோட்டக் காணி, பனங்காணி என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வ.நடராசா பருத்தித்துறை வீதி, இலங்கை நாயகி அம்மன் கோயிலடி, கல்வியங்காடு. (82069)

### தவறிவிட்டது

திலகரத்தினம் சூரியகுமாரன் என்பவருடைய இரண்டு பாஸ் போட்டுக்களும (இல.**G.0318092,** இல.**K.0299318**) முக்கிய ஆவணங்களும் 23-12-2000 அன்று **K.K.S.** வீதி, கொக்குவில் சாருஜன் தொலைத் தொடர்பகத்திற்கு முன்னால் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்பு:- T.P.2961, 2670. (82071)

மீசாலை மேற்கு, மீசாலை என்னும் முகவரியுடைய செல்வரத்தினம் கமலதாசன் என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல.091053451) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கோண்டாவில் மேற்கு, குட்செட் றோட், J/120 கிராம சேவையாளர் பிரிவில் ஒப்படைத்து உதவவும். (82101)

இல.100, மின்சாரநிலைய வீதி, திருகோணமலை என்னும் முகவரியுடைய வேலுப்பிள்ளை மார்க்கண்டு என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 371192271V) நாவற்குழி முகவரியுடைய விசேட அடையாள அட்டை (இல.091000320) என்பன 24-12-2000 அன்று யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நல்லூரில் உள்ள சீவ் கொமினிக்கேசனில் ஒப்படைத்து உதவவும். தொலைபேசி இல. 021-2539 (82099)

### நாவல்

1995ஆம் ஆண்டு இடப் பெயர்வைச் சித்திரிக்கும் நாவல் 'மரணங்கள் மலிந்த பூமி' விற்பனையாகின்றது. பிரபலபுத்தகசாலைகளில் பெறலாம். செங்கைஆழியானின் பரபரப்பாகப் பேசப்படும் நாவல். (82091)

### வீட்டுப் பணிப்பெண் தேவை

40 வயதுக்கு மேற்பட்ட வீட்டுப் பணிப்பெண் தேவை. சந்திக்கும் நேரம்: 1.00 மணி தொடக்கம் 6.00 மணிவரை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: **Dr.A.S.SANTIA-PILLAI(Anton), Manipay Road, Annaicoddai.** (82080)

### 2001 உங்களுக்கு எப்படி?

எங்கும் விற்பனையாகின்றது உங்கள் பிறந்த திகதியின்படி 2001 இல் நிகழவிருக்கும் யோகபலாபலன்களை முன்கூட்டியே அறிந்து கொள்ள வேலணை சோதிடர் **V.A.** சிவராசா வெளியிட்டது என்று கேட்டு வாங்குங்கள். அதிரடி விற்பனை! அட்டகாசமான வெளியீடு. (82079)

### SALES

ஆ.செந்தில்வடிவேலின் புகழ் பெற்ற '**I.Q**' நூல், 'அறிவுத்திற அளவெண்' வெளிவந்துள்ளது. கொழும்பில் ரூபா100 யாழ்ப்பாணத்தில் ரூபா 60 பிரபல புத்தகசாலையில் பெறலாம். (82090)

கலாநிதி க.குணராசாவின் 'கிரகித்தல்' நூல் வெளிவந்துள்ளது. விலை 25/- கிரகித்தலிற்கான ஒரேயொரு கைந்நூல பிரபல புத்தகசாலைகளில் பெறலாம் (82092)

### புறோயிலர் கோழி விற்பனைக்கு

கொழும்பிலிருந்து விமானம் மூலம் தருவிக்கப்பட்ட சுத்தம் செய்த புறோயிலர் இறைச்சிக் கோழி தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: T.கரன், ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதிச் சந்திக் கடை, யாழ்ப்பாணம். (81880)

## கிராம அலுவலர் மூவருக்கு இடமாற்றம்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த மூன்று கிராம அலுவலர்கள் வேறு பிரதேச செயலர் பிரிவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பங்கீட்டு அட்டை மீளாய்வைத் தொடர்ந்து உள்ளக ரீதியாக ஏற்கனவே இடமாற்றம் செய்யப்பபட்ட ஐந்து கிராம அலுவலர்களில் மூவரே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டவர்கள் ஆவர். (ம-7)

# நிவாரணப் பொருள்களை பரிசோதிக்க சுகாதார அதிகாரி தலைமையில் குழு

யாழ்ப்பாணம்,டிசெ.26

யாழ்.குடாவில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கும், இடம் பெயர்ந்தவர்களுக்கும் வழங்கப்படும் நிவாரணப் பொருள்களின் தரத்தினைப் பரிசோதனை செய்வதற்காக சுகாதாரஅதிகாரி தலைமையிலான குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி அமைப்பு வெளியிட்ட செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலர் உணவு நிவாரணப் பொருள்களின் தரம் குறைவாகக் காணப்படுவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் பொதுமக்கள் முறைப்பாடு செய்திருந்தனர் என்றும்-

இதனைத் தொடர்ந்தே வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்குக் கிழக்கு தமிழர் விவகாரத் துறை அமைச்சர் டக்ளஸின் உத்தரவின் பேரில் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் -

செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தக் குழுவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், கூட்டுறவு அபிவிருத்தி உத்யோகத்தர், பிரதேச சபைத் தலைவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கியுள்ளனர்.

நிவாரணப் பொருள்கள் விநியோகத்திற்கு முன் களஞ்சியசாலைகளில் வைத்துப் பொருள்களின் தரத்தினைப் பரிசோதித்து முடிவுகளை அரச அதிபருக்கு தெரிவிப்பார்கள்.

இந்தப் பரிசோதனையின் பின்னரே நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்படும் -

இந்தப் பரிசோதனைக் குழுவினர் நிவாரணப் பொருள்களின் விநியோக நிலையங்களிலும் தரக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைகளை மேற்கொள்வதுடன், நிவாரணப் பொருள்களின் அளவுகளிலும் கவனம் செலுத்துவார்கள். இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

## சுகாதாரப் படக்காட்சி

மானிப்பாய்,டிசெ.26

மானிப்பாய் சுகாதார சமூக சுற்றாடல விவகாரசபை ஒழுங்கு செய்துள்ள மலேரியா, டெங்கு காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வுப் படக்காட்சி இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு காண்பிக்கப்படும்.

மானிப்பாய்ப் பகுதியிலுள்ள பொது இடங்களில் இவை காண்பிக்கப்படவுள்ளன.

மானிப்பாய் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் வி.கே.வர்ணநாதன், எஸ்.தயாமோகன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் படக்காட்சி காண்பிக்கப்படவுள்ளது. (ம-90)


## வாழ்த்துகின்றோம் - சேவையைப் பாராட்டுகின்றோம்

25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நாளை (27-12-2000) புதன்கிழமை வெள்ளிவிழா மலர் வெளியீடு செய்யும் எமது தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினையும், யாழ்.மாவட்ட ஏனைய பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களையும் மேலும் பல ஆண்டுகள் தாம் சார்ந்துள்ள சமூக மக்களின் பொருளாதார, கல்வி, கலாசார மேம்பாட்டுக்கு சேவையாற்ற வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

- பாரதி சனசமூக நிலையம், வசந்தபுரம், இளவாலை.
- பாரதி முன்பள்ளி நிலையம், வசந்தபுரம், இளவாலை.
- ஐக்கிய வாலிபர் சனசமூகநிலையம், கணேஸ்வரம், தெல்லிப்பழை கிழக்கு.
- ஐக்கிய வாலிபர் முன்பள்ளி நிலையம், கணேஸ்வரம், தெல்லிப்பழை கிழக்கு.
- திருவள்ளுவர் சனசமூக நிலையம், துர்க்காபுரம், தெல்லிப்பழை.
- திருவள்ளுவர் முன்பள்ளி நிலையம், துர்க்காபுரம், தெல்லிப்பழை.
- கலைச் செல்வி சனசமூக நிலையம், சித்தியம்புளியடி தெல்லிப்பழை.
- கலைச் செல்வி முன்பள்ளி நிலையம், சித்தியம்புளியடி தெல்லிப்பழை.
- தெல்லிப்பழை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் துர்க்காபுரம், தெல்லிப்பழை.
- தெல்லிப்பழை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பணியாளர் நலன்புரிச் சங்கம் துர்க்காபுரம், தெல்லிப்பழை.
- கலைச் செல்வி மகளிர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம், சித்தியம்புளியடி, தெல்லிப்பழை.

(82100)


## நெஞ்சம் சுமக்கும் ஓராண்டு நினைவலைகள்

பூவாய் மலர்வு 27 - 11 - 1972



கனியாய்ப் பறிப்பு 26 - 12 - 1999

### திருமதி மதனரூபி தேவானந்தன்

ஆண்டொன்று ஓடி மறைந்திடினும் - அக்கா!
உன் நிலா முகம் மறைந்திடுமா?
ஆண்டுகள் ஆயிரம் கடந்தாலும் - உன்தன்
நினைவலைகள் நெஞ்சைவிட்டு நீங்காது அக்கா!
அன்புமழை பொழிந்தெம்மை வளர்த்தெடுத்த
ஆசையக்கா நீ பட்ட கஷ்ரங்கள் ஏராளம்
அன்பு மொழி கேட்டே, படுத்துறங்கிப் பழகிய,
நாங்கள் இப்போ தூக்கம் இன்றித் துடிக்கின்றோம்.
அக்கா! உன் ஆசை அத்தான் உனைச் சேர்ந்திருக்க,
தவமிருக்க, நீமட்டும், தனிமையில் எங்கு சென்றாய்?
ஆயிரமாயிரம் யுகங்கள் மலரட்டும் - எம்
நெஞ்சமதில் உன்ஞாபகம் நிலைத்திருக்கும்- உன்
ஆசைமுகம் அதில் தோன்றி புன்னகை- என்றும்
பூத்திருக்கும். *உன் நினைவுகள் சுமையானவை அல்ல*
*என்றும் சுகமானவை தான்!*

உன்நினைவில் வாடும்
*ஆருயிர் அத்தான்* **தேவானந்தன்,**
**அம்மா, சகோதரர், சகோதரி**
**மற்றும் உற்றார், உறவினர்.**

*சிங்கை நகர்,*
*புலோலி தெற்கு,*
*புலோலி.*

(82087)

## SHOTOKAN KARATE ACADEMY

(I.U.M.A & U.T.K.F)



(ஆசிரியருடன் மாணவர்கள்)

*மாணவர்கள்*

**T.THUSHANANTH, S.KIRUPAIRAJAH, T.VISHNUTHAS**

(1ஆம் கறுப்புப்பட்டி) (1ஆம் கறுப்புப்பட்டி) (1ஆம் கறுப்புப்பட்டி)

**SENSEI D. ANTO DINESH (M.T.SK)** (3ஆம் கறுப்புப்பட்டி) அவர்களினால் 17-12-2K அன்று மேற்படி மாணவர்கள் கறுப்புப் பட்டிக்கு தரம் உயர்த்தப்பட்டமையையிட்டு கழக மாணவர்கள் மனமகிழ்வு அடைகின்றனர்.

**SENSEI: D. ANTO DINESH, M.T.SK (3rd DAN)** அவர்கள் கராத்தே நடுவராக **(Referee) I.U.M.A** தலைமையகத்தில் (Colombo) தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**S.K.A கழகம்**
**மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.**

(82087)

# புலிகளின் நடவடிக்கைகள் இந்தியாவுக்கு அச்சுறுத்தலாம்

## அமெரிக்க இராணுவ சஞ்சிகை தெரிவிப்பு

வாஷிங்ரன், டிசெ. 26

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது பயங்கரவாத நடவடிக்கைகள் மூலம் இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக இருப்பதுடன் அமெரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் கூட அத்தகைய நடவடிக்கைகளை விஸ்தரித்து விடக் கூடிய அபாயம் உள்ளது.

அமெரிக்க இராணுவ சஞ்சிகை ஒன்று இவ்வாறு எச்சரிக்கை செய்துள்ளது.

தமிழர்களுக்கு தனித் தாயகம் கோரி இலங்கையில் போராட்டத்தில ஈடுபட்டிருக்கும் இந்த இயக்கத்துக்கு இன்னும் தமிழ் நாட்டில் கணிசமான செல்வாக்கும், அனுதாபமும் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது

அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா ஆகியவற்றுக்கு ஆயுதக் கடத்தல மற்றும் போதைவஸ்து கடத்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் ஏற்படலாம்.

தாய்லாந்து, கம்போடியா ஆகிய நாடுகளுக்கு கப்பல்களில் சுதந்திரமாகச் சென்று வரும் விடுதலைப் புலிகள் அங்கு ஆயுதங்கள் மற்றும் வெடி பொருள்களைக் கறுப்புச் சந்தையில் சுதந்திரமாகக் கொள்வனவு செய்து கொள்ள முடிகின்றது. இத்தகைய ஆயுதங்களை இலங்கை இராணுவத்துக்கு எதிராக வெற்றிகரமாகப் பயன்படுத்தவும் அவர்களால் முடிகின்றது — என்று அச் சஞ்சிகையில் வெளியான கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# மனித உரிமைகளை மீறாமல் நடக்கும்படி இலங்கை அரசுக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுக்க வேண்டும்

## கனேடியத் தமிழர் அமைப்புக் கோரிக்கை

ரொரன்டோ, டிசெ. 26

சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறாமல் நடக்கும்படி இலங்கை அரசுக்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட வேண்டும்

கனடாவின் ரொரன்டோ நகரில் செயற்பட்டு வரும் இலங்கைத் தமிழர் சங்கம், அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மெடலின் அல்பிரைட்டிடம் கோரியுள்ளது.

பண்டாரவளை பிந்துனுவெவ புனர் வாழ்வு முகாமில் தமிழ்க் கைதிகள் படுகொலை செய்யப்பட்டது குறித்து மேற்படி சங்கத்தினர் அமெரிக்க அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்தில் இந்தக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில்;-

சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறாதிருக்கும் வகையில் இலங்கை நடந்து கொள்ளக் கூடியவாறு அதற்குக் கடுமையான அழுத்தங்கள் கொடுக்கப்பட வேண்டும்.

நீண்ட காலமாக சர்வதேச சமூகம் இலங்கை இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் ஈனத்தனமான கொடூரப் படுகொலைகளை கவனத்தில் கொள்ளாது பாராமுகமாக இருந்து வருகின்றது.

இந்த நிலையை மாற்றி இலங்கை அரசினைக் கட்டுப்படுத்துவதற்கு ஏற்ற கண்டிப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பிந்துனுவெவ படுகொலைகளின் கொடூரத் தன்மைகளும் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

(ஒ-ம-5)

# ஈராக் மீது விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தும் அமெரிக்காவும் பிரிட்டனும் ஐ. நாவின் விதிகளை மீறுகின்றன

## சதாம் ஹுசைன் குற்றச்சாட்டு

பாக்தாத், டிசெ. 26

ஈராக் தொடர்பான ஐ. நா. பாதுகாப்பு மன்றத் தீர்மானத்தை அமெரிக்காவும் பிரிட்டனும் மீறி வருவதாக ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

ஈராக் சென்றுள்ள சீனத் தூதுக் குழுவினரிடம் சதாம் இது குறித்துத் தெரிவித்தார்.

அப்போது அதிபர் சதாம் மேலும் கூறியதாவது :-

ஈராக்கின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில், அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் விமானங்கள் அன்றாடம் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்துகின்றன. இது மனித உரிமைச் சட்டங்களை மீறிய செயலாகும்.

இதனால் நாட்டு மக்கள் துயரத்துக்குள்ளாகின்றனர். அமெரிக்காவும், பிரிட்டனும் மேற்கொள்ளும் தாக்குதலை ஐ நா. வேடிக்கை பார்க்கிறது.

இந்த நிலையில் பாதுகாப்பு மன்றத்தின் தீர்மானங்களை நிறைவேற்றும்படி மற்றைய நாடுகளை அமெரிக்காவோ பிரிட்டனோ எப்படி வற்புறுத்த முடியும்.

இவ்வாறு தெரிவித்த சதாம் ஹுசைன், சீன அதிபர் ஜியாங் ஜெமினிடம் இப்பிரச்சினையை தெரியப்படுத்தும்படியும் சீனத் தூதுக் குழுவினரிடம் கேட்டுக்கொண்டார்.



குவைத்தை ஆக்கிரமிக்க முயற்சித்த ஈராக் வான்வெளியைப் பயன்படுத்த ஐ நா. பாதுகாப்புச் சபை தடைவிதித்துள்ளது. இந்தத் தடையை ஈராக் மீறாதவாறு அமெரிக்க, பிரிட்டிஷ் விமானப்படையினர் கண்காணித்து வருகின்றனர்.

கண்காணிப்பு விமானங்கள் குண்டு வீசித் தாக்குவதாக ஈராக்தரப்பில்கூறப்படுகிறது.

அதே சமயம் தமது விமானங்களைத் தாக்கும் ஈராக்கிய ராணுவத் தளங்கள் மீதே குண்டு வீசுவதாக அமெரிக்க, பிரிட்டிஷ் தரப்புகள் கூறி வருகின்றன. (ஒ-5)

# பெத்தலகேமில் நத்தார்விழா கொண்டாட முடியவில்லை

## பாப்பரசர் கவலை

வத்திக்கான், டிசெ 26

இயேசு பிரான் பிறந்த புனித நகரான பெத்தலகேமில் மிலேனியத்தின் முதல் நத்தார் பண்டிகையைக் கொண்டாட முடியவில்லை என்று பாப்பரசர் வருத்தம் தெரிவித்தார்.



இந்த வருட நத்தார் கொண்டாட்டங்களில் பிரதான நிகழ்ச்சி நேற்று வத்திகான் நகரில் இடம்பெற்றது.

அங்கு நடைபெற்ற நத்தார் நள்ளிரவுப் பிரார்த்தனைக் கூட்டத்தில் பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் அருளுரை வழங்கினார்.

பாதுகாப்புக் காரணங்களால் இம் முறையும் பெத்தலகேமில் நத்தார்க்கொண்டாட்டத்தை சிறப்பாக நடத்த முடியவில்லை என்று அப்போது பாப்பரசர் கூறினார்.

இஸ்ரேலில் உள்ள பெத்தலகேமில், மேற்காசியப் பதட்ட நிலை காரணமாக கடந்த சில வருடங்களாக நத்தார் கொண்டாட்டம் பெரிய அளவில் கொண்டாடப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(ஓ)

# ஹிஸ்புல்லாக்கள் லெபனானில் உலக ஜெருசலேம் தினப்பேரணி

பெய்ரூட், டிசெ. 26

உலகஜெருசலேம் தினத்தை முன்னிட்டு பலஸ்தீன விடுதலைப் போராட்ட அமைப்புகளில் ஒன்றான ஹிஸ்புல்லா இயக்கத்தினர் லெபனானில் பேரணி ஒன்றை நடத்தினார்கள்.

லெபனான் அதிபரின் சார்பாக அமைச்சர் ஒருவர் இந்தப் பேரணியில் பங்கேற்றார்.

பேரணியின் முடிவில் ஹிஸ்புல்லா இயக்கத்தின் பொதுச் செயலாளர் ஷேக்ஹாசன் நஸ்ருல்லா உரையாற்றினார்.

இஸ்ரேலுடன் எந்த வித சமாதானத் திட்டத்துக்கும் பலஸ்தீனர்கள் உடன்பட முடியாது என்று அப்போது அவர் வலியுறுத்தினார்

உலக ஜெருசலேம் தினமானது, ஒவ்வொரு ஆண்டும், றம்ழான் நோன்புக் காலத்தின் கடைசி வெள்ளிக்கிழமை கொண்டாடப்படுகிறது.

இத் தினத்தைக் கொண்டாடும் யோசனையை 1979 ஆம் ஆண்டு இஸ்லாமியப் புரட்சியின் பின்னர் ஷியா மதத் தலைவர் அயதுல்லா கொமெனி தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

(ஒ-5)

# மேற்காசியப் பேச்சில் சிக்கல்

அமெரிக்காவில் இடம் பெறும் மேற்காசியப் பிரச்சினை குறித்த சமாதான பேச்சில் இஸ்ரேல், பலஸ்தீனப் பிரதிநிதிகளிடையே பெரிய அளவில் கருத்து வேறுபாடு நிலவுவதாகக் கூறப்படுகின்றது.

பழைய ஜெருசலேமில் யூதர்கள் வழிபாடு நடத்த உள்ள சட்டப்படியான உரிமையை பலஸ்தீனர் அங்கீகரித்தால் கைமாறாக மலைக் கோயில் குறித்த பிரச்சினை பற்றி பேச்சு நடத்தலாம் என்ற இஸ்ரேலியத் தரப்பு கூறி வருவதாலேயே சிக்கல் தோன்றியுள்ளது.

# விநாடிக்கு 20 மைல் வேகத்தில் பூமியின் மீது மோதவிருந்த குறுங்கோள் விலகிச் சென்றது

லண்டன், டிசெ. 26

ஒரு நகரத்தை மோதி அழிக்கக் கூடிய 50 மீற்றர் குறுக்களவு கொண்ட குறுங்கோள் ஒன்றினால் பூமிக்கு ஏற்படவிருந்த ஆபத்து அதிர்ஷ்டவசமாக விலகியதாக பிரிட்டிஷ் வானியலாளர்கள் கூறியுள்ளனர்.

விநாடிக்கு 20 மைலுக்கும் அதிகமான வேகத்தில் பூமியை நோக்கி இந்தக் குறுங்கோள் வந்து கொண்டிருந்ததாகவும் ஆனால் அதிர்ஷ்டவசமாக பூமியில் இருந்து 8 லட்சம் கிலோ மீற்றர் தொலைவில் திசை திரும்பியதாகவும் வானியலாளர்கள் தெரிவித்தனர்.

பூமியிலிருந்து விலகிய குறுங்கோள் லண்டனுக்கு மேலாக விண்ணைக் கடந்து சென்றதை சக்தி வாய்ந்த தொலை நோக்கி வழியே கண்டறிந்ததாக அவர்கள் கூறினர்.

இத்தகைய குறுங்கோள்களால் பூமிக்கு ஏற்படக்கூடிய ஆபத்துகளைத் தடுக்க விண்கோள்கள் கண்காணிப்புத்திட்டம் ஒன்றைச் செயற்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

# காஷ்மீர்ப் பிரச்சினை தொடர்பான சமாதானத் தீர்வு குறித்து 3 கட்ட வரைவுத் திட்டம்

## பாகிஸ்தான் அறிவிப்பு

இஸ்லாமாபாத், டிசெ 26

காஷ்மீர் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காண்பதற்கான 3 கட்ட வரைவுத் திட்டம் ஒன்றை பாகிஸ்தான் வெளியிட்டுள்ளது.

இந்தத் திட்டம் குறித்து பாகிஸ்தானிய வெளியுறவு அமைச்சர் அப்துல் சதார் அறிவித்துள்ளார்.

வரைவுத்திட்டத்தின்படி பாகிஸ்தான் — இந்தியா இடையேயான எல்லைக் கோட்டை — ஓட்டிய சண்டை நிறுத்தப் தொடர்வது.

குரியத் மாநாடு கட்சி உள்ளிட்ட அமைப்புகளுடன் ஆயுதத பேச்சுகளை இந்தியா நடத்துவது.

இறுதியாக காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சு வார்த்தையில் ஈடுபடுவது

ஆகிய 3 கட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதனைக் கூறிய அப்துல் சதார், பாகிஸ்தானுடன் பேச்சுக்களை மீண்டும் தொடங்க இந்தியா சரியான திசையில் செல்வதாகவும் தெரிவித்தார்.

இதே சமயம்,

காஷ்மீர்ப் பிரச்சினையில் தீர்வுகாண இந்தியா நடத்தும் பேச்சுக்களில் முதற் கட்டத்திலேயே கலந்து கொள்ளப் பாகிஸ்தான் வற்புறுத்தாது என்று இராணுவ ஆட்சியாளர் பர்வேஸ் முஷாரப தெரிவித்துள்ளார்

சமாதானப் பேச்சை இந்தியா முதலில் குரியத் மாநாட்டுக் கட்சி உள்ளிட்ட அமைப்புகளுடன் நடத்தப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்

காஷ்மீர் பிரச்சினை தொடர்பான பேச்சுக்களில் பாகிஸ்தான் ஆரம்பத்தில் இருந்தே பங்குபற்ற வேண்டும் என்று அந்த நாட்டின் இராணுவ அரசு முன்னர் வலியுறுத்தியதாலேயே பேச்சு வார்த்தைகளில் முட்டுக்கட்டை ஏற்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

(ஒ-5)

# நகரில் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ள வீதிகள், கட்டடங்களை விடுவிக்க முயற்சி

## யாழ். பிரதி மேயர் தகவல்

யாழ்ப்பாணம், டிசெ. 25

யாழ். மாநகர சபைப் பகுதியில் போக்குவரத்துக்குத் தடைசெய்யப்பட்ட வீதிகளைத்திறப்பதற்கும், பொது மக்களின் பாவனைக்கு அனுமதிக்கப்படாத வர்த்தக நிறுவனங்கள் மற்றும் கட்டடங்களை விடுவிப்பதற்கும் அரசியல் ரீதியான அழுத்தங்களை மேற்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

இவ்வாறு யாழ். மாநகர சபையின் பிரதிமேயர் சட்டத்தரணி நடராஜா ரவிராஜ் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ் நகரில் மூன்றில் ஒரு பகுதி வீதிகள் படையினரால் தடை செய்யப்பட்ட பகுதிக்குள் அல்லது இராணுவ பாவனையிலோ இருக்கின்றன. இந்த வீதிகள் பொது மக்களின் பாவனைக்குத் திறந்துவிடப்படவேண்டும்.

யாழ். மாநகர சபைக்கு வருமானம் தரக்கூடிய ஹோட்டல்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் பல இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் இருக்கின்றன. இதனால் மாநகர சபையின் வருமானத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபை எல்லைக்குள் இருக்கும் வீதிகளைத் திருத்தம் செய்வதற்கு இரண்டு கோடி ரூபா தேவைப்படும் என்று மதிப்பீடு செய்யப்பட்ட போதும் இந்த ஆண்டில் ஒரு கோடியே 60 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதியிலிருந்து வீதி அபிவிருத்தித் திணைக்களம் மூலம் வீதிகள் செப்பனிடப்பட்டன.

யாழ். மாநகர சபையினால் இவ் வருடத்தில் வீதி புனரமைப்பு வேலைகளுடன் ஏனைய வேலைத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இந்த வேலைத்திட்டங்களுக்கு ஒரு கோடியே ஒரு லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளன.

மாநகர சபை நிதியிலிருந்து 24லட்சம் ரூபாவும், பிரமாண அடிப்படையிலான ஒதுக்கீட்டில் இருந்து 20 லட்சம் ரூபாவும், பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இருந்து 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், மாகாண சபை விசேட நன்கொடையாக 8 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும்; வடக்கின் மீள்குடியமர்வு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையிடமிருந்து 80 லட்சம் ரூபாவும் என மாநகர சபையின் வேலைத் திட்டங்களுக்கு ஒரு கோடியே 30 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது.

பிரமாண அடிப்படையிலான ஒதுக்கீட்டில் 12 லட்சம் ரூபாவே எமக்குக் கிடைத்தது. இதற்கான வேலைத் திட்டங்கள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மீதி 8 லட்சம் ரூபா இதுவரை அனுப்பி வைக்கப்படவில்லை.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து கிடைத்த 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவில் அரியாலை காநதி ச. ச. நிலையத்திற்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் வில்லூன்றி மயானத்துக்கு மதில் கட்டுவதற்கு 2 லட்சம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

மாகாண சபையில் இருந்து கிடைத்த நிதியில் இருந்து மாநகர எல்லைக்குள் பஸ் தரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வடக்கில் மீள் குடியமர்வு அதிகார சபையிலிருந்து நவீன சந்தையைத் திருத்தம் செய்வதற்கு 80லட்சம் ரூபா வழங்கப்பட்டது. இந்த நிதி கடந்த ஒக்ரோபரிலே சபைக்குக் கிடைத்தது. இம்மாத இறுதிக்குள் இந்த வேலைகள் முடிக்கப்பட வேண்டும் என்பதால் திருத்த வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

இரண்டாயித்து ஓராம் ஆண்டில் மாநகர சபை உறுப்பினர்களுக்கு என ஒதுக்கப்படும் நிதியில் 65 வீதமானது தெருக்கள் மற்றும் வடிகால்களைச்செப்பனிடுவதற்கும் 35 வீதம் ஏனைய வேலைகளுக்கும் பயன்படுத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். நகரில் உள்ள திறந்த வெளிக் கலையரங்கையும் இந்த ஆண்டில் திருத்தம் செய்வதற்கு திட்டமிட்டு வருகிறோம். இதற்கு 10 லட்சம் ரூபா தேவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாக கவனிப்பாரற்ற நிலையில் இருக்கும் மணிக்கூட்டுக் கோபுரம் திருத்தம் செய்யப்படவுள்ளது. பிரிட்டிஷ் இளவரசர் 1998 ஆம் ஆண்டில் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு என யாழ். மாநகர சபைக்கு வழங்கிய 10லட்சம் ரூபா நன்கொடையில் இருந்து நான்கு புதிய மணிக்கூடுகள் கொள்வனவு செய்யப்பட்டு இந்த மணிக்கூட்டுக் கோபுரத்தில் பொருத்தப்படவுள்ளன

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் (ஜீ.ரி.இசற்) யாழ். மாநகர சபைப் பகுதியில் ஆற்றிவரும் அளப்பரிய பணிகளுக்குப் பாராட்டுதல்களையும் நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நகரிலுள்ள வடிகால்கள் புனரமைப்பு மற்றும் குப்பைகள் மூலம் உரப்பசளை தயாரித்தல் போன்ற திட்டங்களை ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் மூலம் செய்வதற்குத் திட்டமிட்டு வருகிறோம்.

### கழிவகற்றும் லொறி

நகரிலுள்ள கழிவுப்பொருள்களை அகற்றுவதற்கு 60 லட்சம் ரூபா பெறுமதியான லொறியொன்றினை கொழும்பிலுள்ள ஜப்பான் தூதரகம் மூலம் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது

சுப்பிரமணியம் பூங்காவை புனரமைப்புச் செய்வதற்கு இரண்டு கோடி ரூபா செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான நிதியை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறோம்.

யாழ். நகரில் நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு பற்றைகளை அழிப்பதற்கும் விசேட பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மாநகரசபையில் மேலதிகமாக 200 தொழிலாளர்கள் கடமை ஆற்றுகின்றபோதும் நாட்டு நிலைமை காரணமாக இவர்களை வேலையில் இருந்து நிறுத்தி வைக்க முடியாதநிலைஏற்பட்டுள்ளது

மாநகரசபையின் சுகாதாரப் பிரிவு சிறந்த சேவையாற்றி வருகிறது. சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரம் சிறந்த பணிகளை ஆற்றி வருகிறார்.

நகரிலுள்ள பிரமுகர்கள் மற்றும் கல்விமான்களின் ஆலோசனைகளைப் பெற்று யாழ். மாநகர சபையின் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற் குதிட்டமிட்டு வருகிறோம்

எமது சபையின்நடவடிக்கைகளுக்கு ஏனைய தமிழ்க்கட்சி உறுப்பினர்களின் ஒத்துழைப்பு தாராளமாக கிடைக்கின்றது அவர்களின் ஒத்துழைப்புடனே நாம் பல திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றி வந்துள்ளோம்.

இப்படி அவர்கூறினார்,

# வலி. தென்மேற்குபிரதேசசபையை நகரசபையாக்குவதற்கு முயற்சி

வலி. தென்மேற்கு, டிசெ.26

வலி. தென்மேற்கு -மானிப்பாய் பிரதேச சபையை நகர சபையாக மாற்றுவதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளின் உதவியுடன் தற்போது நகரத் திட்டமிடல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அடுத்த ஆண்டு மே மாதம் பிரதேச சபையை நகரசபையாக்குவதற்கான வர்த்தமானி அறிவித்தல் விடப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

மானிப்பாய்ப் பிரதேச சபையை நகரசபையாக்குவதற்கான நடவடிக்கையில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலும் மயிலும் குகேந்திரன் (ஜெகன்) மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சர் நந்த மித்திரவுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (ம—185)


# தவறிவிட்டது

கனகன்புளியடி மட்டுவிலைச் சேர்ந்த த. தியாகராசா (தாத்தா) என்பவருடைய தேசிய அ. அட்டை (இல. 243600367 V), வங்கி சேமிப்புப் புத்தகங்கள், பாஸ்போட், உறுதி முதலிய ஆவணங்களுடன் வீட்டுத் திறப்புகள் அடங்கிய கைப்பை ஒன்று நெல்லியடி சந்தைக்குப் பின்புறம் உள்ள முருகன் கோயிலடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நெல்லியடி கலியுகன் கடையில் ஒப்படைத்துதவவும்.

(82106)



சாமி சரணம்

# ஐயப்ப யாத்திரை

24—12—2000 ஞாயிற்றுக்கிழமை காலை

கி. ஹரிஹரசுதசாமி தலைமையில்

அந்தண குருமார்களும் ஐயப்பசாமி பக்தர்களும்

அனலைதீவில் உள்ள ஐயப்பன் ஆலயத்திற்குச் சென்று விசேட பூசைகள் பஜனைகள் நடத்தி வைத்தார்கள். அவர்களை அனலைதீவு மக்களும் பரிபாலன சபையினரும் வரவேற்று சகல வசதிகளையும் செய்து மனமகிழ்வித்தனர்.

ஐயப்ப பக்தர்கள்,
யாழ்ப்பாணம்.

(82104)


# சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, டிசெ. 26

அராலி ஆகாயக்குளம் அருள்மிகு ஸ்ரீ விநாயகர் தேவஸ்தான வருடாந்த திருவாசகப் பெருவிழா ஆலய சபா மண்டபத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 4. 30 மணிக்கு நடைபெறும்.

[ம-30]

★ ★ ★

வடமராட்சி, டிசெ. 26

நாட்டில் சமாதானமும் அமைதியும் சுபீட்சமும் வேண்டி யாழ்ப்பாணம சத்திரம் ஸ்ரீ ஞானவைரவர் கோயிலில் எதிர்வரும் முதலாம் திகதி புத்தாண்டு மஹாயாக விசேட திரவ்விய ஹோம அபிஷேகம், பூசைகள் இடம் பெறும். (ம-173)

★ ★ ★

கொழும்புத்துறை, டிசெ. 26

கொக்குவில் கிழக்கு அருள் மிகு ஸ்ரீ பொற்பதி விநாயகர் ஆலயததில் தற்போது பிள்ளையார் பெரும் கதைப் படிப்பு காலையில் ஆரம்பமாகித் தினசரி நடைபெற்று வருகிறது. (ம-30)

★ ★ ★

கொழும்புத்துறை, டிசெ. 26

தொல்புரம் பத்தானையம் பதி அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் சுவாமி கோயிலில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பிற்பகல் 5.30 மணி தொடக்கம் 6.30 மணி வரை ஆலய பரிபாலன சபையின் செயலாளர் டாக்டர் க. லோகேஸ்வரன் தலைமையில் நாடு நலம் பெறவும், நாட்டில் அமைதி, சமாதானம், சுபீட்சம் என்பன நிலவவும், மக்கள் மன நிம்மதியுடன் சந்தோஷமாக வாழவும் இறை ஆசி வேண்டி விசேட பஜனை - கூட்டுப் பிரார்த்தனை என்பன நடைபெற்று வருகின்றன. (ம-30)

# விடைத்தாள் திருத்துவோருக்கு விசேட போக்குவரத்து வசதி

வடமராட்சி, டிசெ. 26

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்களை திருத்தும் பணியில் ஈடுபடும் வடமராட்சிப் பிரதேச ஆசிரியர்களுக்கு விசேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

விடைத்தாள் திருத்தப்படும் எதிர்வரும் 3 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை பருத்தித்துறையிலிருந்து வதிரி, நெல்லியடி ஊடாகவும், மந்திகை, கலிகைச்சந்தி, நெல்லியடி ஊடாகவும் யாழ்ப்பாணத்துக்கு இரு மினி பஸ்கள் சேவையிலீடுபடவுள்ளன.

அதிகாலை 5 30 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து விடைத்தாள் திருத்தும் ஆசிரியர்களை ஏற்றிச் செல்லும் இரு மினி பஸ்களும் பிற்பகலில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியிலிருந்து ஆசிரியர்களை ஏற்றிச் கொண்டு பருத்தித்துறைக்கு திரும்பிச் செல்லும். (இ-173)

# வானொலியில் 'அமைதித் தூது' நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், டிசெ. 26

நத்தார் தினத்தையொட்டி யாழ் சேவையில் இன்று இரவு 8 00 மணி முதல் 8. 30 மணி வரை அமலமரித் தியாகிகளின் இறையியலகக்குரு மாணவர்களின அமைதித் தூது நிகழ்வு இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்ச்சி நேற்று இரவு ஒலிபரப்பாக இருந்த போதும் தவிர்க்க முடியாத காரணங்களால் இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

# உள்ளூராட்சித் தேர்தல்கள் செப்ரெம்பருக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, டிசெ. 26

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெற உள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலை அடுத்த செப்ரெம்பர் மாதம் வரை ஒத்திவைக்க அரசாங்கம் ஆலோசித்து வருவதாக உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சர் நந்திமித்திர எக்கநாயக்க தெரிவித்தார்.

கடந்த 22 ஆம் திகதி நாத்தாண்டியத் தொடுவாயில் நடைபெற்ற முதலமைச்சர்களின் மாநாட்டிலேயே அவர் இதனைக் கூறினார்,

உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் பிற்போடப்படலாம் என அண்மையில் செய்திகள் வெளியாகி இருந்தமை தெரிந்ததே.

(ஐ-8)

# இரவு வேளைகளில் கடையில் திருட்டு

ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்த நேரம் பலசரக்குக் கடை ஒன்றின் ஓடு பிரித்து உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்துமூவாயிரத்து500ரூபா பணத்தைத்திருடிக் கொண்டு தலைமறைவாகியுள்ளனர்.

இத் திருட்டுச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவு புலோலி தெற்கு சாரையடியில் இடம்பெற்றது

இதுகுறித்து கடை உரிமையாளர் பொ. பாலச்சந்திரன் பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் புகாரிட்டுள்ளார். (ஐ-109)

# செஞ்சிலுவைக் கப்பல் சேவைகள் அடுத்த மாதமே ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம்,டிசெ.26

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் இடம்பெறும் பயணிகள் மற்றும் நோயாளர் கப்பல் சேவைகள் ஜனவரியிலேயே மீண்டும் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன என்று அந்த அமைப்பின் யாழ். அலுவலகப் பிரதிநிதி உதயனுக்குத் தெரிவித்தார்.

ஏற்கனவே உடன்பாடு காணப்பட்டபடி இந்தச் சேவைகள் திருகோணமலைக்கும் பருத்தித்துறைக்கும் இடையிலேயே இடம்பெறவிருக்கின்றன என்றும் - காங்கேசன் துறையில் பயணிகளை ஏற்றி இறக்குவது தொடர்பாக இணக்கம் எட்டப்படவில்லை என்றும்-

இது விடயமாகத் தொடர்ந்து பேச்சுக்கள் இடம்பெற்று வருவதாகவும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

'சிற்றி ஓவ் றிங்கோ' கப்பல் திருத்த வேலைக்காக அடுத்த வாரம் டொக்யாட் நிறுவனத்திற்கு செல்லவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## குமார் பொன்னம்பலத்துக்கு நகரில் சிலை நிறுவப்படும்

யாழ்ப்பாணம்,டிசெ.26

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர், மாமனிதர் குமார் பொன்னம்பலத்துக்கு யாழ்.நகரில் சிலை ஒன்றினை அமைப்பதற்கு தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் யாழ்.கிளை தீர்மானித்துள்ளது.

கட்சியின் யாழ்.கிளையின் கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் தலைவருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை உயரப்புலம் ஆனைக்கோட்டையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

குமார் பொன்னம்பலத்தின் நினைவு தினமான எதிர்வரும் 5 ஆம் திகதி யாழ். நாச்சிமார் கோயிலடியில் அஞ்சலிக் கூட்டம் நடத்தவும் அந்த ஆலயத்தில் அன்னதானம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டிலுள்ள தொகுதிகள் தோறும் கட்சியின் கிளைகளை அமைத்து தொகுதி ரீதியில் கட்சியின் அமைப்பாளர்களை நியமிப்பது என்றும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ஐ-5-173)

## விற்பனை நிலையம்

தென்மராட்சி,டிசெ.26

புதிய கல்வியாண்டு ஆரம்பமாகவுள்ளதால் பாடசாலை உபகரணங்களை விற்பனை செய்வதில் வர்த்தகர்கள் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றனர்.

கட்டைவேலி, நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச்சங் கத்தினர் பாடசாலை உபகரணங்கள் விற்பனைக்கென நெல்லியடி பஸ் நிலையத்துக்கு அருகில் புதிய விற்பனை நிலையமொன்றினை கடந்த வாரம் முதல் ஆரம்பித்துள்ளனர்.

அப்பியாசக் கொப்பிகள் விசேட விலைக்கழிவுடன் விற்பனை செய்யப்படும். 200 ரூபாவுக்கு மேல் கற்றல் உபகரணங்களைக் கொள்வனவு செய்வோருக்கு ஊக்குவிப்புப் பரிசுத் திட்டத்தினையும் வழங்க முன்வந்துள்ளனர். (ஐ-117)

## வர்த்தகர்களின் இழப்புகள் மதிப்பீடு

சாவகச்சேரி,டிசெ.26

சாவகச்சேரி நகரப் பகுதி வர்த்தக நிலையங்களில் ஏற்பட்ட இழப்புகளுக்கு நஷ்டஈடு பெறுவதற்காக விண்ணப்பித்த் வர்த்தகர்களின் விண்ணப்பங்கள் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினால் பரிசீலனை செய்யப்படவுள்ளன. இதற்கென 6 பேர் கொண்ட குழு ஒன்று மன்றத்தினால் நியமிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

## விடிய விடிய இசை நிகழ்ச்சிகளை நடத்துவதற்குத் தடை விதிப்பு!

கொழும்பு,டிசெ.26

நள்ளிரவு ஒரு மணிக்குப் பின்னர் இசை நிகழ்ச்சிகளை நடத்த அனுமதி வழங்குவதில்லை என்று கலாசார அமைச்சு தீர்மானித்திருப்பதாக 'சண்டே ஒப்சோவர்' பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது.

நாட்டில் உள்ள இசைக்குழுக்களின் பிரதிநிதிகள் அண்மையில் கலாசாரப் பிரதியமைச்சர் ரி.பி.ஏக்கநாயக்காவைச் சந்தித்து கலந்துரையாடினர். அதனைத் தொடர்ந்தே இசை நிகழ்ச்சிகளை விடிய விடிய நடத்துவதற்கு அனுமதி வழங்குவதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சகல இசைக் குழுக்களையும் கலாசார அமைச்சில் பதிவுசெய்து கொள்ளவும், இசைக்குழுக்களில் அங்கம் வகிக்கும் சகலருக்கும் விசேட அடையாள அட்டைகளை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## திருவெம்பாவைக் காலத்தில் ஊரடங்கைத் தளர்த்துக!

யாழ்ப்பாணம்,டிசெ.26

வலி.மேற்கு உட்பட குடாநாடு முழுவதும் திருவெம்பாவை உற்சவ காலத்தில் அதிகாலை 4.30 மணிக்கு ஊரடங்கை நீக்க நடவடிக்கை எடுக்கும்படி வலி.மேற்கு இந்து ஆலயங்களின் மகாசபை, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த மகாசபையின் உறுப்பினர்கள் நேற்று அமைச்சரை நேரில் சந்தித்து இந்தக் கோரிக்கையை விடுத்தனர். இது விடயமாக சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் டக்ளஸ் உறுதி கூறியுள்ளார்.

வலி.மேற்கில் சேதமடைந்த ஆலயங்களைப் புனரமைப்புச் செய்வதற்கும், கைவிடப்பட்ட குழந்தைகளின் மீட்சிக்காக அநாதைகள் விடுதி ஒன்றை வலி.மேற்கில் அமைக்கவும் நிதி உதவி வழங்குமாறு மகா சபையினர் கோரிக்கை விடுத்தனர்.

இந்தச் சந்திப்பில் வலி மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன், நல்லூர் பிரதேசசபைத் தலைவர் க.மணிபல்லவராஜன் ஆகியோரும் பங்குபற்றினர். (ஐ-3)


## கண்ணீர் அஞ்சலி

### இரத்தினம் கனகராசா

(பிரபல ஓவியக் கலைஞர்)

அவர்களின் மறைவையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆ.ஜீவரட்ணம்
(கலாபூஷணம் -ஆச்சாரி)

*ஆறுமுகம் சிற்பாலயம்,*
*காளி கோயிலடி,*
*திருநெல்வேலி.*

(C/14463)



## குடும்ப புனர்வாழ்வு நிறுவனத் திட்ட இணைப்பாளருடனான கலந்துரையாடல்

உளவளத்துணையாளராகப் பயிற்சிபெற்ற/பெறுநருக்கான கலந்துரையாடல் நாளை(27.12.2000) புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு சாந்திகத்தின் தற்காலிக அலுவலகமான இணுவில் மக்கிலியாட் வைத்தியசாலையில் நடைபெறும்.


ஆர்வலர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றார்கள்.

*இடம்* : **மக்கிலியாட் வைத்தியசாலை.**

*காலம்* : **27.12.2000 பிற்பகல் 2.00 மணி**

'சாந்திகம்'

(C/14457)

உரும்பிராய் மேற்கு இளைஞர் சனசமூக நிலைய கனிமொழி முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. விழாவில் மாணவர்கள் உடற்பயிற்சியில் ஈடுபட்ட காட்சி. (ஐ)

## ஆசிரிய நியமனம்: வலிகாமம் வலயத்தில் 28 பேருக்கு அழைப்பு

வலிகாமம் வலயத்தில் ஆசிரியர் நியமனம் தொடர்பாக 28 பேரை எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு சமுகமளிக்குமாறு வலயப் பணிப்பாளர் வீ.இராசையா கேட்டுள்ளார்.

அழைக்கப்பட்டுள்ளோர் விவரம் வருமாறு:-

சண்முகலிங்கம் நாகதரணி (இணுவில்), ஈஸ்வரநாதபிள்ளை குமரன் (மானிப்பாய்), நவரட்ணம் சத்தியநிதி (அளவெட்டி), சண்முகநாதன் குமுதினி (தெல்லிப்பழை), சிவகுரு ஜெகத்ஜீவன் (சுன்னாகம்), பாஸ்கரன் ஜீவனி (சுன்னாகம்).

கமலநாதன் ருக்ஷி (கொக்குவில்), சண்முகநாதன் மீனா (இணுவில்), சண்முகராஜரட்ணசர்மா சுபாஜினி (சுன்னாகம்), செல்லப்பா சுதர்சினி (சுன்னாகம்), ஜெயவதனி வேலாயுதபிள்ளை (சுன்னாகம்), பொன்னுத்துரை தவமலர் (வட்டுக்கோட்டை).

இராஜரட்ணம் தர்மினி (சங்கானை), சண்முகம் பிரேம்குமார் (மானிப்பாய்), கமலேந்திரன் கல்யாணி (மானிப்பாய்), செல்லத்துரை ஜெயந்தி (மானிப்பாய்), சிறினிவாசன் ஜெயந்தி (இளவாலை), நா.தாட்சாயினி (மானிப்பாய்).

நவரட்ணம் சுபாங்கி (மானிப்பாய்), தெட்சணாமூர்த்தி கீதாம்பாள் (இளவாலை), செல்வராஜா சுதாஜினி (வட்டுக்கோட்டை), நித்தியானந்தன் மஞ்சுளா (சித்தன் கேணி), நவரட்ணராசா தாட்சாயினி (சித்தன் கேணி), கணேசன் டிலாந்தி (வட்டுக்கோட்டை), யேசுபாலன் கிறிஸ்ரில்லா (தெல்லிப்பழை), சுந்தரேஸ்வரன் சுதர்சினி (அளவெட்டி), பாலசுப்பிரமணியம் சுபாஜினி (தெல்லிப்பழை), அம்பிகைபாகன் வாசுகி (ஏழாலை). (ஐ-3)


## JAFFNA TECHNICAL INSTITUTE
## JAFFNA, SRILANKA

Regd. No. 15251 T.P.-3335

## தொழிற் பயிற்சிகள்

☆ **RADIO, T.V. AND VIDEO DECK REPAIRING**
சகல இன ரேடியோ, ரீ.வி., வீடியோ டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள் என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
(காலம் 9 மாதங்கள்)

☆ **MOTOR REWINDING AND ELECTRICAL WIRING**
சகல இன மோட்டார், (F) பான் ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் விட்டு மின்னிணைப்பு முறை என்பன பயிற்சியளிக்கப்படும்.
(காலம் 6 மாதங்கள்)

☆ **MOTOR CYCLE MECHANISAM**
சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
(காலம் 5 மாதங்கள்)

☆ **AIR CONDITIONING AND REFRIGERATION**
சகல இன குளிர்சாதனப்பெட்டி மற்றும் எயார் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
(காலம் 6 மாதங்கள்)

☆ **CITY AND GUILDS OF LONDON EXAM**
(1)POWER (2)ELECTRONICS

IN VIEW OF OUR 21st ANNIVERSARY J.T.I.

**Note:** எமது நிறுவனத்தில் தொழிற்பயிற்சிகளைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சைகள் நடைபெறவுள்ளதால் சகல மாணவர்களையும் 31.12.2000க்கு முன்னர் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

முன்னர் பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்களும் மற்றும் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய மாணவர்களும் அனுமதி அட்டையுடன் தொடர்பு கொள்ளவும்.

**புதிய பயிற்சிகள் ஆரம்பம்:**
**05-01-2001 (கிழமை நாள்களில்)**
**06-01-2001 (சனி, ஞாயிறு நாள்களில்)**

மேலதிக விவரங்களுக்கு நேரில்

- DIRECTOR

**52/1 Stanley Road,**
**Jaffna.**
*(றெயில்வே கடவை அருகில்)*

**NO.7, Palaly Road,**
**Jaffna.**

(C/14456)

# முடிவை மறுபரிசீலனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தைக் கடைப்பிடிக்கும். அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதியுடன் முடிவடையும் பண்டிகைக் கொண்டாட்ட காலத்தில் நாம் வலிந்த தாக்குதல்களிலோ மற்றும் போர் நடவடிக்கைகளிலோ ஈடுபடப் போவதில்லை. ஆயினும் ஆயுத ரீதியாக எம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமையை நிலைநாட்டத் தவறமாட்டோம்.

எமது நிலைகள் மீது எதிரி தாக்குதல்களை நடத்தினால் நாம் தற்காப்புப் போரில் ஈடுபடுவோம் என்றும் விடுதலைப் புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் முழு விவரமும் வருமாறு:-

சமாதான வழிமுறைகளை ஊக்கப்படுத்தும் நல்லெண்ண நோக்கத்துடன் ஒரு மாத காலத்திற்கு ஒருதலைப்பட்சமாக நாம் அறிவித்த போர் நிறுத்தத்தை அரசு நிராகரித்துள்ளது. இது எமக்கு ஏமாற்றத்தையும் கவலையையும் தருகின்றது. எமக்குச் சமாதானத்தில் உள்ள உண்மையான அக்கறையின் எடுத்துக்காட்டாகவே எமது போர் நிறுத்தப் பிரகடனத்தைக் கருதவேண்டும் என நாம் விளக்கியிருந்தோம்.

சமாதானப் பேச்சுக்கான ஓர் உகந்த புறநிலையை உருவாக்கும் ஒரு நல்லெண்ண முயற்சியாகவே எமது அறிவிப்பு அமைந்தது. ஆனால், அரசானது எமது போர் நிறுத்த யோசனையை நிராகரித்ததுடன் நல்லெண்ண முயற்சிகள் இப்போது அவசியமில்லை என்றும் அறிவித்திருக்கின்றது. அரசின் இந்த நிலைப்பாடு எமக்குப் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது. அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் மத்தியில் ஆழமான நம்பிக்கையீனமும், சந்தேகமும், பகைமையும் நிலவுவதனால் சமாதானப் பேச்சுக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்குவதற்கு நல்லெண்ண முயற்சிகள் தேவையாகும்.

எமது போர் நிறுத்த யோசனையை அரசாங்கம் நிராகரித்துள்ளமையானது எம் மீது அரசு கொண்டிருக்கும் நம்பிக்கையீனத்தையும் பகைமையையுமே எடுத்துக்காட்டுகின்றது.

நடைபெறமுடியாத காரியத்தில் அபத்தமான தர்க்கத்தில் அரசு நம்பிக்கை கொண்டிருப்பது போலத் தெரிகின்றது. அதனால்தான், போரும் சமாதானமும் ஒத்திசைவாகச் செல்ல முடியும் என நம்புவதுடன், போரைத் தொடர்ந்து நடத்திக்கொண்டு, பேச்சுக்களையும் ஒரே சமயத்தில் நடத்தலாம் என அரசு நினைக்கின்றது. இந்த முரணான நிலைப்பாட்டை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. போரும் வன்முறையும் இரத்தக் களரியும் நிலவும் பகைமை நிறைந்த சூழலில் உண்மையான, நேர்மையான பேச்சு வார்த்தைகளை நடத்த முடியாது. இரண்டு தசாப்த காலத்திற்கு மேலான கொடியபோர் காரணமாக இரு தரப்பினர் மத்தியிலும் ஆழமான வேற்றுமை புரையோடிக் கிடக்கிறது. இந்த வரலாற்றுப்பகைமை காரணமாகவேதான் போர் நெருக்கடியைத் தணிக்க வேண்டும் என்றும் பரஸ்பர நல்லெண்ணம் நிலவ, சமாதான சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்றும் நாம் வலியுறுத்தி வருகின்றோம். ஆகவேதான் அரசு தனது கடும் போக்கைக் கைவிட்டு, ஆக்கபூர்வமான எமது யோசனையை ஏற்க வேண்டும் எனக் கோருகின்றோம்.

கிறிஸ்தவர்களினதும், இந்துக்களினதும், முஸ்லிம்களினதும் புனித காலமாகத் திகழும் பண்டிகைக் காலமாகிய இந்த மாதத்தில் நாம் தொடர்ந்து போர்நிறுத்தத்தைப் பேண முடிவு செய்திருக்கிறோம். விட்டுக் கொடாத போக்கை அரசு கைவிடாத போதும், சமாதான முயற்சிக்கு இன்னும் ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

அரசு தனது நிலைப்பாட்டை மீள்பரிசீலனை செய்து, போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்து நல்லெண்ண சூழ்நிலையை உருவாக்க முன் வருமென நாம் எதிர்பார்க்கின்றோம். அரசு தனது போர்வாதக் கடும்போக்கைக் கைவிட்டு,சமாதான வழி முறையில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிக்குமாறு அனைத்துலகமும், குறிப்பாக அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய நாடுகள், இந்தியா போன்ற நாடுகள் தமது செல்வாக்கைப் பிரயோகித்து அழுத்தம் கொடுக்கவேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## போர்முனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதேவேளை -

கைதடியில் புதிதாகக் கைப்பற்றிய பகுதிகளில் படையினர் நேற்று அதிகாலை சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த சமயம் விடுதலைப் புலிகள் மோட்டார்த் தாக்குதலை மேற்கொண்டனர் என்றும் -

அதில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் என்றும் மற்றுமொருவர் காயமடைந்தார் என்றும் -

விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

அதே பகுதியில் படையினர் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் விடுதலைப் புலிகள் மூவர் உயிரிழந்தனர் என்றும் விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

(ஐ-3-6-8-15-17-173)

## திருமலையில் பயணிகள் இன்று ஆர்ப்பாட்டம்

திருகோணமலை,டிசெ26

யாழ்ப்பாணம் செல்வதற்காகக் கடந்த பல வாரங்களாகக் கப்பலை எதிர்பார்த்துத் திருகோணமலையில் காத்திருக்கும் சுமார் ஆயிரத்து ஐந்நூறுக்கும் மேற்பட்ட பயணிகள் இன்று அங்கு ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்த உள்ளனர்.

திருகோணமலை ஐக்கிய சந்தைப்பகுதியில் இருந்து ஆரம்பமாகும் இந்த ஊர்வலம் பிரதேச செயலர் அலுவலகம் வரை இடம் பெறும். அங்கு திருகோணமலைப் பட்டணமும் சூழலும் பிரதேச செயலர் எஸ்.வேலும்மயிலுவிடம் பயணிகள் மகஜர் ஒன்றைக் கையளிக்க உள்ளனர். (ஐ-8)

## மிருசுவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தளபதி நேரடியாகக் கண்காணித்து வருகின்றார். இந்த விசாரணைகளைத் துரிதமாக மேற்கொள்ள சிவில் பொலீஸாருக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்கும் படி அவர் இராணுவப் பொலீஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதன் மூலம் குற்றமிழைத்தவர்களை விரைவாகச் சட்டத்தின் முன் நிறுத்த உதவவேண்டும் என்றும் இராணுவத் தளபதி சிவில் பொலீஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் மேலும் படையினர் சம்பந்தப்பட்டிருக்கிறார்களா என்பதை விசாரிக்க மற்றுமொரு விசாரணையை நடத்துமாறும் இராணுவத் தளபதி உத்தரவிட்டுள்ளார்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முந்திய அறிக்கை

இந்தச் சம்பவம் தொடர்பாக நடவடிக்கைத் தலைமையகம் முன்னதாக நேற்று நண்பகல் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மிருசுவிலிலிருந்து நெல்லியடியில் வசித்து வந்த எண்மர் மிருசுவிலுக்குச் சென்றவேளை காணாமற்போனதாக யாழ்.சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகருக்குத் தகவல் கிடைத்தது.

அந்தத் தகவலை அடுத்து பாதுகாப்புப் படையினர் காணாமற்போனவர்களின் உறவினர்கள் மற்றும் அந்தப் பிரதேச பொது மக்களின் உதவியுடன் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்த விவகாரம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஐந்து படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசாரணைகளை மேற்கொள்ள விசேடமாக இராணுவ பொலீஸ் குழு ஒன்றை இராணுவத் தளபதி நியமித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக, மனித உரிமை மீறல் செயல்களில் ஈடுபடும் படையினரை விசாரிப்பதற்கு இராணுவ விசாரணை நீதிமன்றம் ஒன்றை ஏற்படுத்துமாறு யாழ். மாவட்ட கட்டளைத் தளபதிக்கு இராணுவத் தளபதி உத்தரவு பிறப்பித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. (ஐ-3)

## கடும் மழைக்கு மத்தியிலும்
# ரோந்துகள், வீதிச் சோதனைகள் மட்டக்களப்பில் நேற்றுத் தீவிரம்!

மட்டக்களப்பு,டிசெ.26

மட்டக்களப்பு நகரில் நேற்று முன்தினம் முதல் கடும் மழையுடன் காற்றும் தொடரும் அதேசமயம் படையினரின் சோதனைகளும், ரோந்துகளும் நேற்று அங்கு அதிகரித்துக் காணப்பட்டன.

நேற்று முன்தினம் இரவு கடுங் காற்றுடன் ஆரம்பமான மழை நேற்றும் தொடர்ந்தது. நேற்று மட்டும் 75.3 மில்லி மீற்றர் மழை பெய்ததாகக் கணிக்கப்பட்டுள்ளது.

படையினரின் சோதனைகளும், வீதி ரோந்துகளும் வழமையை விட நேற்று அதிகரித்துக் காணப்பட்டன.

மழையில் நனைந்தவாறு பொது மக்கள் சோதனைகளுக்கு உள்ளாகினர். (ஐ-3-21)

# மிருசுவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவர்களுடன் சென்ற மற்றொருவரான பொன்னுத்துரை மகேஸ்வரன் என்பவர் மட்டும் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகிய நிலையில் அங்கிருந்து தப்பி வந்து, மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றார்.

காணாமற்போன எட்டுப்பேர் தொடர்பாகவும் இவர் தெரிவித்த சில தகவல்களின் அடிப்படையில் நடத்தப்பட்ட விசாரணைகளை அடுத்தே இந்தப் புதைகுழி கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப் பட்ட படையினர் சிலர் இந்தப் புதைகுழியை அடையாளம் காட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மிருசுவில் வடக்கு படித்த மகளிர் குடியேற்றத் திட்டப் பகுதியில் உள்ள தென்னங்காணி ஒன்றில் நின்றிருந்த வேளையே இவர்கள் காணாமற்போனதாகத் தகவல் கிடைத்தது. இதனை அடுத்து யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் உபாலி குணசேகர, உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் நிமால் ஸ்ரீநாத் ஆகியோர் அடங்கிய பொலீஸ் குழு நேற்று மாலை 4 மணியளவில் அப்பகுதிக்குச் சென்று சாவகச்சேரி மாவட்ட நீதிவான் அ.பிரேமசங்கர் முன்னிலையில் புதைகுழியைத் தோண்டும் பணியில் ஈடுபட்டது.

அதற்குள்ளிருந்து உருக்குலைந்த நிலையில் எட்டுச் சடலங்கள் மீட்கப்பட்டன.

புதிதாக வெட்டப்பட்டிருந்த சுமார் 4 அடி அகலமும் 8 அடி ஆழமும் எட்டு அடி நீளமும் கொண்ட அந்தக் குழியில் - தரையில் இருந்து இரண்டடி ஆழத்துக்குக் கீழே எட்டுச் சடலங்களும் ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கப்பட்ட நிலையில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுப் பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமான புதைகுழி தோண்டும் பணி மாலை ஆறு மணி வரை நீடித்தது. பின்னர் இரவு ஏழு மணியளவில் சடலங்கள் அங்கிருந்து மந்திகை மருத்துவமனைக்கு எடுத்து வரப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டன.

பிரேத பரிசோதனை இன்று நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. சடலங்கள் வைக்கப்பட்டிருந்த மந்திகை மருத்துவமனையின் பிரேத அறைக்கு நேற்றிரவு பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

(ஐ-3-5-15-109-173)

## இறுதிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடவடிக்கை எடுத்ததன் மூலம் மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டதாக ஈ.பி.டி.பி.வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நடவடிக்கைக்குத் தேவையான சகல உதவிகளையும் ஈ.பி.டி.பி. வழங்கி இருந்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் வி.கே.தகேந்திரன் தெரிவித்தார்.புதைகுழி தொடர்பான தகவல்களை வெளியிட்ட மகேஸ்வரன் தற்போது ஈ.பி.டி.பியினரின் பாதுகாப்பில் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3-5-173)

## 30சடலங்களும்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குருநகர் இறங்கு துறையில் வைத்துப் படை அதிகாரியிடமிருந்து சடலங்களைப் பொறுப்பேற்ற செஞ்சிலுவை அதிகாரிகள் அவற்றை படகுகள் மூலம் எடுத்துச் சென்று யாழ். கடனீரேரிக்கு அப்பால் கல்முனைக் கடற் கரையில் வைத்து விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளிடம் ஒப்படைத்தனர்.

(ஐ-3-5-6-15-173)


எமது புதிய வீடியோ CD வெளியீடு

முரளி, சித்ரா, நாசர், வடிவேலு மற்றும் பலர் நடித்த

★ மனுநீதி

பிரதிகளை காலை 8.30 மணிக்கு பெற்றுக்கொள்ளலாம்.

எம்மிடம் வீடியோ CD, கசற் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

தமிழ் வீடியோ CD - 75/-
ஆங்கில வீடியோ CD - 50/-

அல்டி

எலக்றோனிக்ஸ்,
இல.15, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/14461)



எமது புதிய வீடியோ CD வெளியீடு

முரளியின்

மனுநீதி

ஒறிஜினல் வீடியோ CD வெளியீடுகள்

- வண்ணத்தமிழ் பாட்டு (பிரமிட் - 2.30 மணி)
- சீனு (FIVE STAR)
- புரட்சிக்காரன் (பிரமிட்)
- நாகத்தம்மன் (பிரமிட்)

பிரதி ஒன்று 250 ரூபா

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(C/14461)



இன்றைய வீடியோ CD வெளியீடு




★ மாதவன், ஸ்நேகா, மணிவண்ணன், சார்லி, வையாபுரி, தலைவாசல் விஜய் நடிப்பில்

என்னவளே

திரையரங்குகளுக்கு முன்னுரிமை

ஒறிஜினல் வெளியீடு

சீனு

மூர்த்தி வீடியோ
மானிப்பாய்
(C/14462)



A/L 2001
DAY CLASS

மறு அறிவித்தல் வரை ஆரிய குளம் சந்தியில் அமைந்துள்ள கல்வி நிறுவனத்தில் நடைபெறும்.

DMI
யாழ்நகர்.
(82088)



புதிய வீடியோ CD வெளியீடு

சிம்ரன் நடித்த
☆ சம்மதம் தருவாயா?
முரளி நடித்த
☆ மனுநீதி

அனைத்துத் திரை நட்சத்திரங்களின் 20 ஆம் ஆண்டு சினிமா எக்ஸ்பிரஸ்

விஷ்ணு வீடியோ
K.K.S. வீதி,
கோண்டாவில்.
(82076)



ஈசன் கல்வி நிலையம்

கே.கே.எஸ்.வீதி - கோண்டாவில்.

தனித்துவமும் விவேகமும் மிக்க எமது வழமையான யாழ்.முன்னணி ஆசிரியர் குழுவுடன் ஆரம்பமாகின்றது.

A/L-2003

கலை,வர்த்தக, கணித,உயிரியல் பிரிவுகள்

ஆரம்பம்:-27-12-2K (WED)
3.00 p.m (old)

— நிர்வாகி.

(82122)



புலமைப் பரிசில் திட்டம் ~ 2001
அறிவித்தல்

மேற்படி திட்டத்தினூடாக எமது நிறுவனத்தில் 2001/2002 கல்வியாண்டில் கணனிக் கற்கை நெறிகளை மேற்கொள்ள விண்ணப்பித்த மாணவர்களின் கவனத்திற்கு :

புலமைப்பரிசில் போட்டிப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள்

அனுப்பிவைக்கப்படும் திகதி : 03-01-2001
போட்டிப்பரீட்சை இடம்பெறும் திகதி : 07-01-2001
கற்கை நெறிகள் ஆரம்பமாகும் காலப்பகுதிகள் :
I : 14-01-2001 [ஞாயிறு]
II : 05-05-2001 [சனி]
III : 15-09-2001 [சனி]

புலமைப்பரிசில் திட்டத்திற்கு விண்ணப்பித்த மாணவர்கள் போட்டிப்பரீட்சைக்கு பொதுஅறிவு, நுண்ணறிவு என்பவற்றினை ஆயத்தப்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

"IIS உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி"

Institute of Informatics Studies
TP No.021-2831 E-mail : iis@slmet.lk


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.12.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.